தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 நளி 26 (12 - 12 - 1982) விலை 65 காசு | இதழ் எண் : 6 | பகுதி 6

பாரதியாரை அளவுக்கு மீறி வானளாவப் பாராட்டுகின்றனர்! கொண்டாடுகின்றனர்!

சென்னை. திசம் 10— பாரதி நூற்றாண்டு என்ற பெயரில் பாரதிக்கு உலகளாவிய விளம்பரத்தைச் செய்வதில் பார்ப்பனர்கள் முனைப்பாய் இருக்கின்றனர், இந்த வகையில் அவர்கள் கொஞ்சமும் தயங்குவதில்லை; எவர்க்கும் அஞ்சுவதுமில்லை; எல்லாப் பார்ப்பனரும் ஒருங்கிணைந்து ஒருமுகமாகச் செயல்படுகின்றனர். தாங்கள் மட்டும் பாராட்டுவதுடன் நிற்காமல், தங்கள் இனத்தவர் எந்தெந்த மாநிலங்களில், நாடுகளில் உள்ளனரோ, அவர்களைக் கொண்டும், அயல்நாட்டு அறிஞர்கள், அதிகாரிகள், ஆட்சியாளர்களைக் கொண்டும், அவர்களின் வழி, அங்கிருக்கும் அயல் மாநிலத்து-அயல்நாட்டு அறிஞர்கள், அதிகாரிகள், ஆட்சியாளர்களைக் கொண்டும், பாரதியாரை, உலகத்துக்கே ஒளி கொடுத்த பேரறிஞன் என்பது போலும், தமிழிலேயே இவர்தாம் பெரிய மாபெரும் பாவலர் என்பது போலும் வரைதுறையின்றித் தலைக்கு மேல் வைத்துக் கூத்தாடுகின்றனர். இதற்காக அவர்கள் என்ன வகையான முயற்சியையும் செய்யத் தயங்குவதே இல்லை. நம் இனத்து வீடணர்களும், அரசில் உள்ளவர்களும அவர்களுக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் பேராதரவு தருவது வேடிக்கையாகவும் வியப்பாகவும் இருக்கிறது. இவ்வகையில், எல்லாருக்கும் பொதுவான வானொலி, தொலைக்காட்சி முதலிய அரசு விளம்பரக் கருவிகளை, அவை அவர்கள் சார்பில் உள்ளன என்பதற்காக, முழுமையுமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த வகையில், ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று மணிநேரம் வானொலியிலும், தொலைக் காட்சியிலும் பாரதி பாடல்கள், நாடகங்கள், சிறப்புரைகள், பொது மக்களுக்குச் சலிப்பூட்டும் வகையிலும், வெறுப்பூட்டும் வகையிலும் இடம் பெறுகின்றன. இது மிகவும் கண்டிக்கத் தக்கதும், தமிழர்கள் மிகஉன்னிப்பாகக் கவனிக்கத் தக்கதும் ஆகும்.

பாரதி ஒரு தேசியப் பாவலர்; ஓரளவு சிறந்த பாவலர் என்பதில் நமக்கு மாறான கருத்தில்லை. அவர் தேசியத்திலும் கூட ஆரியத்தை இணைத்துப் பாடியவர். இன்னும் ஆரியத்தையே தேசியமாக்கிச் சொன்னவர். அவரிடம் உள்ள பாட்டுத் திறத்தைக் கூட ஒருவாறு நாம் மதிக்கலாம் ஆனால் அதற்காக அவரை 'மகாகவி' என்பது தான் அளவிறந்த பாராட்டாகத் தெரிகிறது. அவர் பார்ப்பனராக உள்ள ஒரே காரணத்தால் அவர் பாடல்கள் உலக அளவில் மிகச் சிறந்தன ஆகி விடா.

பார்ப்பனர்கள் எப்பொழுதும் தங்கள் இனஞ்சார்ந்த அல்லது சார்பான புலவர்களையும் அறிஞர்களையுமே, அவர்கள் எந்தத் தரம் கொண்டவர்களாக இருப்பினும், அளவிறந்து பாராட்டும் ஒரு சார்பு மனம் கொண்டவர்கள். தமிழ் மொழியைப் பாராட்டிய—தனித்தமிழ் உணர்வூட்டிய— அதன் பொருட்டுப் பரிதிமாற் கலைஞர் என்று தம் பெயரையே தூய தமிழாக மாற்றிக்கொண்ட - வி.கோ. சூரிய நாராயண சாத்திரியாரையும், நடுநிலைத் தமிழ் வரலாற்றுக் கருத்துகளைக் கூறிய இரா.இராகவ அய்யங்கார். மு. இராகவ அய்யங்கார் போன்றோரையும், அவர்கள் இனத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தும், பார்ப்பனர்கள் மனந்திறந்து பாராட்டியதில்லை ஆனால், பார்ப்பனர்களுக்குச் சார்பான மொழி, இன, இலக்கிய வரலாற்றுக் கருத்துகளைக் கொண்டிருந்தவர்கள் என்பதற்காகவே, அவர்கள் தமிழினத்தைச் சார்ந்தவர்களாக இருந்தும், வையாபுரியார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் போன்றவர்களை வெகுவாகப் பாராட்டத் தவறுவதே இல்லை. இது, அவர்களின் இனத்தின் இயற்கையான பண்பு,

பெரியார் நூற்றாண்டையும் ஏதோ தேவை கருதி அரசு கொண்டாடியது. ஆனால், பார்ப்பனர்களுக்கு அது மிகுந்த எரிச்சலைத் தந்தது. அதன் விளைவாக வானொலியிலும், தொலைக் காட்சியிலும், ஏதோ. கடனுக்காக, மேலிட அழுத்தத்திற்காக நாலைந்து நிகழ்ச்சிகளை நடத்தினர். அதுபற்றி அரசு மிகுவாகக் கண்டு கொள்ளவில்லை, ஆனால், பாரதியை இப்பொழுது வேரோடு பிடுங்கி வெளிப்படுத்துகின்றனர்.

பாரதி நூற்றாண்டில் தான் திரு. வி. க. வுக்கும் நூற்றாண்டு வந்தது. ஆனால், தொடக்கத்தில் ஓரிரண்டு நிகழ்ச்சியுடன் அவர் நூற்றாண்டு விழாவை முடித்துக் கொண்டனர். அரசும் அவர் விழாவை ஓரிரண்டு இடங்களில் வேண்டா வெறுப்பாகவே நடத்தியது

வானொலி, தொலைக்காட்சி போலும் ஆற்றல் மிகுந்த விளம்பரக் கருவிகள் அவர்களின் கைகளில் இருப்பதால் நினைத்த நேரமெல்லாம் பாரதி பெருமைகளே, பாராட்டுகளே பறைசாற்றப் படுகின்றன.

பாரதியே புகழ்ந்து பாடிய திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள் —இவர்களைவிட பாரதி மிகவும் சிறந்தவர் போலும், மேலான உலகப் புகழுக்குரியவர் போலும் ஒரு மாயையே, அவரை அளவிறந்து புகழ்ந்து பேசுவதன் மூலம் உருவாக்குவது, பார்ப்பனரின் கரவான, குறும்பான, வல்லாளுமைப் போக்கையே தெளிவாகக் காட்டுகிறது,

பாரதியைப் பார்ப்பனர்கள் ஒட்டு மொத்தமாக இட்டுக் கட்டிப் பேசும், அல்லது பாராட்டும் இந்தப் போக்கை தமிழர்கள் இனி மேலாவது பின்பற்ற வேண்டும். அவர்களுக்கு இத்தகைய உணர்ச்சி கண்டிப்பாக வரவேண்டும். தமிழறிஞர்களையும் புலவர்களையும், தமிழர்கள், மிக மிக ஆராய்ந்து, அவர்களின் தனிப்பட்ட குண நலன்களையெல்லாம் பூதக் கண்ணாடி வைத்து, வேண்டா வெறுப்பாக, மிகத் துல்லியமாக அளவிட்டு, எடையிட்டுப் பார்த்துப் பாராட்டுகின்ற கஞ்சத்தனப்போக்கைக் கைவிட்டுக், கண்ணை மூடிக் கொண்டு உவந்து பாராட்டுகிற போக்கைச், செயற்கையாகவேனும், சில காலத்திற்குக் கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய பாராட்டுகளால் வரும் சிற்சில தவறுகளை விட, அவற்றால் வரும் இனநல உணர்வே — எழுச்சியே பெரிதும் மதிக்கத் தக்கது! உண்மைத் தமிழர்கள் இதை விளங்கிக் கொள்ள வேண்டும்!

— பெருஞ்சித்திரனார்.



மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

நச்சுத்தன்மை மிக்க பூச்சி மருந்துகளும் நலக்கேடுகளும்

—(குமுகாய நலச் சிந்தனைக்காக)

இந்தியாவில் பூச்சி ஒழிப்பு மருந்துகள் ஏராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் நம் மக்களின் உடல்நலனுக்கும் உயிருக்கும்கூட ஊறு உண்டா என்பது மிகவும் கவலையுடன் கவனிக்க வேண்டிய செய்தி ஆகும்.

உதவி என்ற பெயரில் அமெரிக்கா, பிரிட்டன் முதலான முன்னேற்றமடைந்த நாடுகள், மூன்றும் உலக நாடுகள் எனப்படும் 'வளர்ந்துவரும் நாடுகளுக்கு' நச்சுத்தன்மையுள்ள பூச்சிக் கொல்லி மருந்துகளை ஏராளமாக வழங்கி வருகின்றன.

இந்நாடுகளில் (மூன்றும் உலக நாடுகள் எனவும், வளர்ந்து வரும் நாடுகள் எனவும் அழைக்கப்பெறும் பின் தங்கிய நாடுகளில்) பூச்சிக்கொல்லி நஞ்சினால் ஆண்டு தோறும் 10,000 பேர் இறக்கின்றனர். 3·65 இலக்கம் பேர் உடல்பாடு அடைகின்றனர். மேலை நாடுகளின் அரசுகள் ஆணையுடன், பன்னாட்டு நிறுவனங்களுடன் நம்நாட்டு மேற்தட்டுத் தலைவர்கள் நஞ்சைப் பரப்புவதில் ஒத்துழைத்து வருகின்றனர்.

ஆக்சுபாம் (OXFAM) என்னும் பிரிட்டானிய நிறுவனத்தின் ஆராய்ச்சி ஒன்று 1976-ஆம் ஆண்டில், அமெரிக்கா ஏற்றுமதி செய்த பூச்சிக் கொல்லிகளில் 30% அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டுவிட்ட வேதியத்தைக் கொண்டதாகும் என்று கூறுகிறது' அவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள 'மாசீட்டு' (Macheta) என்னும் ஒரு வேதியம், இந்தியாவில் நெற்பயிர்களின் களையை அழிப்பதற்காகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

'தீங்கு செய்யக்கூடியது' என்று பிரிட்டனில் தடை செய்யப்பட்டுள்ள பதினொரு பூச்சி மருந்துகள், மூன்றும் உலக நாடுகளுக்கு (இந்தியா போன்ற, வறுமையையும் கடனையும் சுமக்கின்ற நாடுகளுக்கு) ஏற்றுமதி செய்வதற்காகவே தொடர்ந்து உருவாக்கப்படுகின்றன.

இவற்றால் விளையும் கேடுகள் அளவற்றவை. பூச்சி மருந்துகள் சூழ்நிலையைக் கெடுத்து விட்டதன் காரணமாகச் சில அரியபறவை இனங்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டன.

காற்றில் கலந்த நஞ்சு, மெல்லிய ஓடுகளை உடைய பறவை முட்டையில் விரிசலை ஏற்படுத்திக் குஞ்சு வளரும் முன்னே உடைந்துவிடக் காரணமாகிறது.

''டிடிட்டி'' (DDT) என்னும் நச்சு மருந்து கால்நடைகளைத் தாக்கி, அவற்றில் புற்றுநோயை உண்டாக்குகிறது என்பது அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது ஏழைகளின் உணவாகிய மீன்களும் கொல்லப்படுகின்றன.

பூச்சிகளைத் இன்னும் உயிரிகள் ஒழிக்கப்பட்ட பின், பூச்சிகள் மருந்தை எதிர்த்து வாழும் ஆற்றலைப் பெறுகின்றன.

பூச்சிக்கொல்லிகளால் அழிக்கப்பட இயலாதவாறு எதிர்ப்பு ஆற்றலைப் பெற்றுவரும் பூச்சி இனங்கள் பெருகி வருகின்றன.

மேலைநாடுகளில் தடுக்கப்பட்ட சில பி. எச்,சி., டி.டி.டி. போன்ற மருந்துகளோ, ஏழை நாடுகளுக்குத் தொடர்ந்து அனுப்பப்படுகின்றன

1908 முதல் 1945 வரை 131 பூச்சி இனங்கள் எதிர்ப்பு ஆற்றலைப் பெற்று விட்டதாகக் கணக்கிடப்பட்டது. 1954-இல் 25 பூச்சி இனங்களும் நிகழ்பொழுது 436 பூச்சியினங்களும் பூச்சிக் கொல்லிகளால் அழிக்க முடியாத ஆற்றலைப் பெற்று விட்டன

ஆக்சுபாம் ஆய்வறிக்கைப்படி 1965 வரை ஆசியாவில் நெற்பயிரைத் தாக்கும் பூச்சி இனங்கள் எட்டு வகை மட்டுமே இருந்தன. பத்தாண்டுகளில் இவை பதினன்காக உயர்ந்துவிட்டன. பருத்தியைத் தாக்கும் சில பூச்சிகள் பொதுவாகப் பூச்சிக் கொல்லிகளுக்குக் கட்டுப்படுவதில்லை.

செயற்கை வேதிய நஞ்சுகளைக் கொண்டு எல்லா வகைப் பூச்சிகளையும் அழித்துவிடலாம் என்று அறிவியலார் கூறுகின்றனர். இவற்றையும் எதிர்த்து வாழக் கூடிய ஆற்றலைப் பூச்சிகள் பெற்று விட்டால் என்ன செய்வது ?

கடந்த சில ஆண்டுகளில் பூச்சிக் கொல்லி மருந்துகளை மிகுதியாய்ப் பயன படுத்தியதன் காரணமாக 'மலேரியா' எனும் கொடுங்காய்ச்சல் மீண்டும் தலை தூக்கி உள்ளது.

டிடிட்டி (DDT) கலவைகளை எதிர்த்து வாழக் கூடிய மலேரியா நுண்ணுயிரிகள் மட்டும் 52 ஏற்பட்டுள்ளன. மேலும் இப்போது பயன்படுத்தப்பெறும் கொசு ஒழிப்பு மருந்துகளில் பெரும்பாலும் வெள்ளை மண்தான் இருக்கிறது. தேவையாகும் வேதியப் பொருள் இல்லை.

இலக்னோவில், ஓர் ஆராய்ச்சிக் கழகம், மாந்தக் குருதியிலும் 'திசு'க்களிலும் 'குளோரின்' வேதியம் சேர்ந்து வருவதைக் கண்டுபிடித்துள்ளது.

பூச்சிகள் எதிர்ப்பு ஆற்றலை வளர்த்துக்கொள்ளும்போது பூச்சிக்கொல்லிகளிலும் நஞ்சு மிகுவிக்கப்படுகிறது. மூன்றும் உலக நாடுகளில் பயன்படுத்தப்படும் குளோரின் வேதியக் கலவை ஒன்றில், இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட நச்சுவளிச் சரக்கான 'எரியம்' (பாசுபரசு) சேர்க்கப்பட்டுள்ளது இவைபோன்ற வேதியங்கள் யாவும் உயிரினங்களையே எதிர்க்கக் கூடியவை ஆகும். இவை காற்றில் கலந்து உணவுப் பொருள்கள் மூலம் மாந்த உடலில் சேர்ந்து விடுகின்றன.

உலக நலவியல் அமைப்பின் அறிக்கை ஒன்று, இந்தியாவில் குளோரின் வேதியம் அடங்கிய பூச்சிக்கொல்லிகள் அதிக அளவு பயன்படுத்தப்படுவதாகக் கூறுகிறது. 320 பேரிடமிருந்து, ஆராய்ச்சிச் சாலைகளால் எடுக்கப்பட்ட மாந்தக் கொழுப்பில், பூச்சிக் கொல்லி நஞ்சுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கோதுமை, அரசி, பருப்பு, மீன், இறைச்சி, நெய் ஆகிய உணவுப் பொருள்களிலும் நஞ்சுக் கலப்பு காணப்படுகிறது.

வேளாண்மைத்துறையில் பூச்சிக் கொல்லிப் பயன்பாடு பற்றிய கண்காணிப்பு எதுவும இல்லாத நிலையில் நஞ்சு பரவுவது தவிர்க்க முடியாதது.

ஏதம் (அபாயம்) விளைவிக்கக்கூடிய பூச்சிக்கொல்லிகளைத் தடைசெய்யும நடவடிக்கைகளை மூன்றும் உலகநாடுகள் மேற்கொள்ளாதவரை, உலக நிறுவனங்கள் நச்சு மருந்துகளை ஏராளமாகக் கொண்டுவந்து தள்ளியபடியேதான் இருக்கும். இந்த நிறுவனங்கள் அரசு அலுவலர்களுக்குக் கையூட்டு நல்கி, எதிர்ப்பு ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்கின்றன. இந்நிலையில் பூச்சிக்கொல்லி நஞ்சு உணவிலும் உயிர்களின் உடலிலும் பரவி வருவதற்கு யார் பொறுப்பு? எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

- தேவேந்திர சர்மா.

(அடிப்படை: தினமணி – 10-11-82)

வரலாற்றைப் புதுக்குவோம் !

— கு. இராசேந்திரன் க. மு.

தமிழினத்தின் வாழ்வுரிமையை மீட்கும் முனைப்பில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் வெள்வட்டச் செங்கொடியை பாவலரேறுவின் தலைமையில் தூக்கிப் பிடித்துள்ளோம். 'தமிழ் நிலம்' கழகக் கொள்கைகளைத் தாங்கிக் கொண்டு உலகெங்கும் வலம் வரத் தொடங்கி விட்டது. இந்த நூற்றாண்டின் இடைப் பகுதியில் தந்தை பெரியாரால் கண் விழிக்கப் பெற்ற நாம் கண் விழித்ததிலிருந்து சரியாக நடந்த தொலைவினும் கால் தவறி நடந்த தொலைவுகளே மிகுதியாகும்.

ஓர் இனத்தின் ஒட்டுமொத்த விடியலுக்குத் தோள் தட்டிக் கொண்டு எழுந்த நாம், நம் பகை மலையை வீழ்த்தப் புறப்பட்டு மலையை அடையும் முன்பே வழியில் உள்ள கள்ளிச் செடிகளை அகற்றுவதிலேயே காலங் கழித்து உட்பூசலால் உடைந்து உருமாறிக் கொண்டுள்ளோம்.

தமிழ்ப் பெயராலும் தமிழினத்தின் பெயராலும் ஆட்சியைப் பிடித்த நாம், செய நாம் வாங்கிய நிலபுலங்களைப் பட்டியலாக நாம் வாங்கிய நிலபுலங்களையும் கட்டிய வீடுகளையும் மாளிகைகளையும் பட்டியலிட்டுப் பார்க்கின்ற அளவுக்கு (பட்டியலில் அவை அடங்கா என்பது வேறு செய்தி) தமிழ் நிலத்தில் நாம் உண்டாக்கிய அடிப்படை மாற்றங்களையும் மறுமலர்ச்சிகளையும் பெரிதாகப் பட்டியலிட்டுப் பார்க்க முடியுமா என்பதை எண்ணிப்பார்க்கத்தவறி விட்டோம்! நாம் எண்ணிப் பார்த்தவையெல்லாம் கட்டுக் கட்டான உருபாத் தாள்களும் அடுக்கடுக்கான மாளிகைகளும் தாமே!

அரசியலில் நாம் வளைந்து கொடுத்ததும் நெளிந்து கொடுத்ததும் கூட்டுச் சேர்ந்ததும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே அல்லாமல் நம் மொழியையும் மக்களையும் காப்பாற்றிக் கொள்ளவே என்று உறுதியாகச் சொல்ல முடியுமா?

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்ற பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை 'சில்வர் மார்ட்டு'களையும் 'சில்க் ஹவுஸ்'களையும் 'கிராண்ட் ஹோட்டல்'களையும் தெருவெங்கும் நாமே ... வைத்துக் கொண்டே கோடிக் கணக்கில் ... கொண்டாடி ... பணம் செலவழித்துக் ... பற்றுக்குறைக்குத் தலைமை ... கின்றோம். ... அமைச்சர் இந்திரா காந்தியையும் அழைத்து நிறைவு விழா நடத்தப் போகிறோம். பெயர்ப் பலகைகளைத் தமிழால் எழுதுவிக்க ஒரு வலிய முயற்சி மேற்கொண்டால் ஒப்போலை போய் விடுமா என்ன ?

பெரியார் பெயராலும் அண்ணா பெயராலும் பதினைந்து ஆண்டுகள் ஆட்சி நடத்திய பின்னரும் தமிழ் மாமன்னர்களும் உழைப்பாளிகளும் கட்டிய கோயிலில் தமிழர்களும் பூசை செய்ய உரிமை வேண்டும் என்று கோயிலின் வாயிலில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்களை நிறுத்தித் தாமே மன்றாட வைத்துள்ளோம்! தமிழினம் பெற்ற வகுப்பு வாரி உரிமை என்னும் சிறிய உரிமையைக் காப்பதற்கு வேறு அல்லவா அவர் துயிலாது கண் விழிக்க வேண்டியுள்ளது!

புதிய வரலாறு படைக்கின்றோம் என்று வந்த நாம், முன்பே இருந்த வரலாற்றின் ஓரத்தில் ஒதுங்கிய எச்சில் இலைகளையும் அவற்றில் ஒட்டிய பருக்கைகளையும் உண்டு விட்டுத் தமிழினத்தைத் தொடர்ந்து இழிவுக்கும் சுயமைக்கும் இரையாக விட்டு விடுவதா?

நமக்குள் இல்லாத ஒற்றுமையால் நம்மை நாமே அழித்துக்கொள்ள நம் இன மக்களையே சுரண்டி அதில் சேர்க்கும் கொள்ளைப் பொருளால் நடத்தும் 'சுவரொட்டி அரசியலை' என்று நிறுத்திக் கொள்ளப் போகிறோம். பார்ப்பனீய அகப் பகையையும் வல்லாளுமைமிக்க வடஇந்திய முதலாளிப் புறப்பகையையும் சேர்த்து வீழ்த்த ஏமாறும் தமிழினமே நீ ஒன்று திரண்டால் என்ன? ஒன்று திரண்டு பழைய இழிவு வரலாற்றை மாற்றி ஒரு புதிய பாதையில் பொதுமைப் பாதையில் நடையிட்டால்தான் என்ன?

காவிரி நீர் கேட்டு வழிநடைச் செலவு!

தமிழக உழவுத் தொழிலுக்கு ஊற்றுகவும், தஞ்சை திருச்சி மாவட்டங்களின் வளத்தினைக் குறைத்திடும் நோக்கோடும் இந்திராப் பேராயக் கட்சியின் ஆளுகையில் ஆட்பட்டிருக்கும் கருநாடக அரசு, கரவான அரசியல் நோக்கோடு காவிரி நீரினைத் தடையிட்டுத் தேக்கி வைத்திருப்பது அனைவரும் அறிந்ததே

நம்மை ஆளுகின்ற அரசினரின் மெத்தனப் போக்கை எண்ணி வருந்தாமலிருக்க முடியவில்லை. இந்நிலையில் தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வண்ணம், சேலத்தில் 'நவஇந்திய நிர்மானிகள் சங்கம்' என்ற அரசியல் சார்பற்ற இயக்கத்தினர் 50 பேர் (5 மகளிர் உட்பட) வழிநடைச் செலவாகப் பெங்களூர் சென்றுள்ளனர். 19-11-82 அன்று புறப்பட்ட இவர்கள் வரும் 26-11-82 அன்று பெங்களூர் சேர்ந்து, கருநாடக ஆளுநர் முதல்வர் ஆகியோரைச் சந்தித்து வேண்டுகோள் ஒன்றினையும் கொடுக்க உள்ளனர்.

இவர்களை (சேலம்) நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பழனியப்பன் (தி.மு.க.) அவர்கள் வழியனுப்பி வைத்தார். 'எங்களின் உரிமை, காவிரி நீர்' என்றவாறு ஊர்வலத்தினர் முழக்கமிட்டுச் சென்றனர்.

-மு. பழ. சதாசிவம்
செய்தியாசிரியர் சேலம்.

மழை பெய்யாத காரணம்!

நரம்பியம் (வயலின்) வாசிப்பது, யாகம் செய்வது, பாரதம் படிப்பது இவற்றால் மழை பெய்யும் என்பது உண்மையானால், ஆட்சி சரிவர நடைபெறாததால் மழை பெய்யவில்லை என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்? இதை ஒப்புக் கொள்வதன் மூலம், மாநிலத்திலும், நடுவிலும் அரசுப் பொறுப் பேற்றிருக்கும் கட்சிகள் அரசு கட்டிலிலிருந்து கீழிறங்கும் என்று எதிர்பார்க்கலாமா?

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 12-12-82—இதழ் எண்: 6 | பகுதி 6

ஏழை நாட்டில் 750 கோடி!

உலகில் மிகுந்த ஏழைகள் உள்ள நாடுகளாக, உலக வைப்பகம் (World Bank), தன் 1981 - ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்ட 10 நாடுகளில் (பூடான், பங்களாதேசம், சாட், எதியோப்பியா நேபாளம், மாலி, பர்மா, ஆப்கானி சுத்தான், புருந்தி, வட ஒல்டா, இந்தியா), ஆண்டுக்கு 190 தாலர் தனி ஒருவர் வருமானம் உள்ள நாடான இந்தியாவும் ஒன்று.

ஆனால், இந்தியா நடந்துகொள்ளுகிற சில ஆடம்பர, வீண் ஆரவாரமான செயல்களைப் பார்த்தால், இது உலகிலுள்ள பணக்கார - முதலாளிகள் நிறைந்த - தனி ஒருவர் வருமானம் மிக அதிகமாக உள்ள நாடுகள் ஆகிய அமெரிக்கா, உருசியா, சப்பான், குவைத்து, பிரிட்டன் முதலிய நாடுகளில் ஒன்று போல் கருத வேண்டியுள்ளது. இந்நிலை இங்குள்ள ஏழைகளை உய்விக்கும் ஆக்கமான போக்காகத் தெரியவில்லை. உண்பதற்கு ஒரு வேளை முழுச் சோறும் உண்ண முடியாதவர்கள் முக்கால் பங்கினர் உள்ள நாட்டில், இவர்கள் செய்யும் ஆடம்பரமான நடவடிக்கைகள், பாலிலே சோறு, வடித்துப் பன்னீரிலே வாய் கொப்பளிக்கும் வீண் பெருமை மிக்கனவாகவும், ஊதாரித்தனம் மிகுந்தனவாகவும் உள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், சப்பான் போன்ற முன்னேறிய நாடுகளில் பணம் கொழித்துக் கிடக்கின்றது. அவை தன்னிறைவு பெற்று விளங்குகின்றன. கல்வி, தொழில், தரமான வாழ்க்கை முதலியவற்றில் நிறைவடைந்துள்ள அந்நாடுகள், மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் பொழுது போக்கு, விளையாட்டு நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துவது தவறோ குற்றமோ ஆகாது. அங்குள்ள மக்கள் அந்நிலைகளில் பணத்தையும் பொழுதையும் செலவிடுவது, புளியேப்பக்காரன் தான் உண்ட உணவு செரிப்பதற்காகத் தன் உடலை விளையாட்டு போன்ற பயிற்சிகளில் ஈடுபடுத்துவதைப் போன்றது.

ஆனால், பெரும்பாலும் உண்ண உணவேயில்லாமல், கண்ணிடுங்கி, வயிறொடுங்கிப் பசியேப்பம் விடவும் போதிய உயிர்ப்புக் காற்றை நுகரவும் முடியாத பல கோடி ஏழை மக்கள் நிறைந்த ஏதுங் கெட்ட இந்நாட்டில், அது போலும் பொழுது போக்குகளிலும், விளையாட்டு வேடிக்கைகளிலும் கவனம் செலுத்தி, இங்குள்ள செல்வக் கொழிப்புள்ள சிலரை நிறைவு செய்வது, முட்டாள்தனமானதும் கொடுமையானதும், கண்டிக்கத்தக்கதும், எதிர்த்துப் போராடத் தக்கதும் ஆகும்.

அண்மையில் தில்லியில் நடந்து முடிந்த பதினாறு நாளைய ஆசிய விளையாட்டுப் போட்டிகளைப் பார்க்கையில், இந்தியா ஓர் ஊதாரித்தனமான நாடு என்பது நன்கு விளங்கும்! மனம் கொதிக்கும்! வயிறு பற்றி எரியும்! இங்குள்ள கோடான கோடி ஏழை மக்களின் நெஞ்சமெல்லாம் குமுறும்! என்ன செய்வது? அவர்களைப் பற்றி வளமான மாளிகைகளில், மென் பஞ்சு மெத்தைகளில் உருளும் உருவங்கள் எங்கே நினைத்துப் பார்க்கப் போகின்றன!

ஆசிய விளையாட்டுகளுக்காக இந்திரா அரசு செலவிட்டிருக்கின்ற தொகை உருபா 750 கோடி என்று தோராயமாகத் தெரிய வந்திருக்கிறது. உண்மையான செலவு இன்னும் தெரியவில்லை. 1000 கோடி உருபா வரை எட்டலாம்; சரியாகக் கணக்கிட்டால் அதன் மேலும் போகலாம். ஆனால் அரசுக் கணக்கு என்றுமே அரைக் கணக்குதான். பனிக்கட்டியில் அது செய்யப்படுகிற இடத்திலிருந்து, பயன்படுத்துகிற இடம் வரை, ஒழுகும் நீரெல்லாம் அதில் கணக்கில் வராததுபோல், பல ஒழுகிப் போகும் செலவுகள் இந்தக் கணக்கிலும் வருகிறதில்லை. அதுவும் ஊழலும், கையூட்டுக் காழ்ப்பும் சேகேறிப்போன இந்நாட்டு அரசு அதிகாரிகளைப் பற்றி எண்ணுகையில், இந்நாட்டு மக்கள் மிகவும் இரங்கத் தக்கவர்களே!

இத்தகைய சிக்கலுக்குட்பட்ட ஆசிய விளையாட்டுகளில் துறை துறையாகச் செலவிட்ட தொகைகளையும் அவற்றின் வகைகளையும் பார்த்தால், நேர்மையான, மக்கள் மேல் உண்மை அன்புள்ள எந்தப் பொதுவுணர்வு கொண்ட ஒரு தொண்டனுக்கும் மனம பதறிப்போகும்! தசைகள் உருகிப் போகும்! மூளையின் அணுக்கள் கருகிப் போகும்! அதிலும் செய்தித்தாள்களில் வந்தவை இவை! வராதவை இன்னும் எவ்வளவோ? ஆசிய உலகின் 33 நாடுகளிலிருந்தும் அங்கு நடைபெற்ற விளையாட்டுகளில் பங்கு கொள்ள வந்த 5000 விளையாட்டு வீரர்கள், அவர்களுடன் வந்த பரிவாரங்கள், அவர்களின் ஆடலையும் பாடலையும் பார்க்க வந்து மனக்களிப்பும் கிளர்ச்சியும் செயல் கொக்கரிப்பும்கொண்ட அயல்நாட்டு உள்நாட்டு இலக்கக்கணக்கான மக்கள் ஆகியவரிடையே (அந்த ஆண்கள் பெண்களுக்கிடையே) அந்தப்பதினாறு நாட்களில் திருட்டு, ஏமாற்று, பூசல், காதல்களியாட்டம் போன்றவற்றில், எத்தனை வகையான ஒழுக்கக் கேடுகள் நடந்திருக்குமோ, அவற்றையெப்படிக் கணக்கெடுத்துவிட முடியாதோ, அப்படி, அரசு வகையில் திரைமறைவில் ஒழுகிப் போன செலவுகளையும் கணக்கெடுக்க முடியாது. இந்த அளவு செலவு செய்து என்ன நிலையான பயனை இந்த நாடு பெற்றுவிட்டது என்று எவராகிலும் நேர்மையாகத் தெருவில் இறங்கி, நெஞ்சின் மீது கைவைத்துச் சொல்லிவிட முடியுமா?

விளையாட்டுக்கென்றே பல இலக்கக் கணக்கான உருபாச் செலவில் புதிதாக அமைக்கப்பெற்ற புதிய ஊர்! 2600 தொழில் நுட்ப அலுவர்கள், 2000க்கும் மேற்பட்ட அதிகாரிகள், 1000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், 2000க்கும் மேற்பட்ட படைத்துறை வீரர்கள் ஆகியோரின் கடும் உழைப்பில், இலக்கக் கணக்கான கல்லெடை பைஞ்சுதை (Cement), 90 ஆயிரம் கல்லெடை எஃகு, இரும்பு, 300 ஆயிரம் மாத்திரி (கிலோ மீட்டர்) புதைமின் கம்பி, தொடர் மின் கம்பி, ஏழு புதிய விளையாட்டுத் திடல்கள், 853 இரட்டை அடுக்கு மாடி வீடுகள் 2000 பேர் ஒரே நேரத்தில் உட்கார்ந்து சாப்பிடக் கூடிய 3 சாப்பாட்டுக் கூடங்கள், ஒரு திரையரங்கம், 7 மேம் பாலங்கள், 184 அடி உயரத் தண்ணீர்த் தொட்டி, பார்வையாளர் அமர் அடுக்கும் (கேலரி), சிற்றுண்டிச் சாலையும் இணைந்த உயரமான கோபுரம்-ஆகியவை அடங்கிய சிற்றூர்(!) உருவாக்கப் பட்டது. 'ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்ததுபோல்' என்று பழமொழி கூறுவார்கள்! அது போல் 16 நாள் கூத்துக்குப் பல கோடி உருபா பாழாய்ப் போனது, இந்த வறுமையும் அறியாமையும் சாதிமதச் சீரழிவும் கொண்ட இந்த ஏழை நாட்டில்!

அடேயப்பா! இன்னும் எத்தனை எத்தனைக் கூத்துக் கோலங்கள்! கொம்மாளக் கொண்டாட்ட ஏற்பாடுகள்!

உணவுப் பொருள்களைத் தூய்மையாக்கவும், கழுவவும், தோல் சீவவும், தோல் உரிக்கவும், துண்டு துண்டாக நறுக்கவும், அரிக்கவும், அவிக்கவும், பொறிக்கவும், வறுக்கவும் ஆன புதிய புதிய பூதாகாரமான எந்திரங்கள் அடங்கிய பெருமண்டபச் சமையல் கூட்டங்கள்! அவற்றில் 24 மணி நேரமும் சமையல்! வேளை தோறும் தரம், அளவு, சுவை குறையாத இந்திய, சீன, ஐரோப்பிய நாட்டு உணவு வகைகள்! நாளும் ஓர் இலக்கம் அயிரை (கிலோ) எடை உணவுப் பொருள்கள். நாளுக்கு 20 ஆயிரம் முட்டைகள். 10 ஆயிரம் சீர்ப்பு (லிட்டர்) பால், 4 ஆயிரம் குவளைப் பழச் சாறு, 10 ஆயிரம் குவளைப் பனிக்குழை, 10ஆயிரம் வாழைப் பழம், 10 ஆயிரம் அரத்திப் (ஆப்பிள்) பழம், 2 ஆயிரத்து 500 அயிரை (கிலோ) கோழிக்கறி, 2 ஆயிரத்து 500 அயிரை (கிலோ) மாட்டுக்கறி, 2 ஆயிரத்து 200 அயிரை (கிலோ) மீன், 12 ஆயிரம் அயிரை (கிலோ) இறால், ஆயிரம் அயிரை உருளைக் கிழங்கு, 500 அயிரை தக்காளி, இருபதாயிரம் துண்டு உரொட்டி-இப்படிப் பதினாறு நாட்களுக்கு. முன்னும் பின்னும் எத்தனை நாட்கள் என்று தெரியவில்லை. இவற்றுடன் அவ்வப்பொழுது வந்து போகும் விருந்தினர், அரசு அதிகாரக் கொள்ளையர்கள், அவர்களின் குடும்பங்கள் ஆகியோர் சேர்ந்து விழுங்கிய செலவுகளுக்குக்கணக்கும் தெரியாது; தெரிந்துகொள்ளவும் முடியாது. ஏனெனில் இந்த நாட்டு மருத்துவமனைகளில் கிடக்கும் நோயாளிகளுக்கும், சிறைகளில் சீரழியும் சிறையாளிகளுக்கும், வேளை தோறும், நாள் தோறும் வரும், பால், பழங்கள், முட்டைகள், உரொட்டிகள் முதலிய உணவுப்பண்டங்கள், அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய், எண்ணெய், நெய், விறகு, கரி முதலிய உணவாக்கப் பொருள்கள் இவற்றை விழுங்கும் மருத்துவர், மருத்துவப் பணியாளர்கள் குடும்பங்கள், காவலர்கள், காவல்துறை, சிறைத்துறை அதிகாரிகள் குடும்பங்கள் இவற்றின் கணக்கெல்லாம் பொதுமக்களுக்கு எங்கே தெரியப் போகிறது! அதைப் போலவே அந்தக் கணக்கும் இந்திரா காந்தி உள்பட யாருக்கும் தெரியாது.

இத்தகைய ஆர்ப்பாட்டத் தப்புத் தாளங்கள் ஒருபுறம் கிடக்கட்டும்! விளையாட்டுக்கு முன்னும் பின்னும் நடந்த குதிரையாட்டம், சிலம்பாட்டம், கரகாட்டம், பெண்களைக் கொண்டு ஆட்டுவித்த ஒயிலாட்டம், மயிலாட்டம், நாயாட்டம், வான்கோழியாட்டம், காளையாட்டம், படைத்துறையினரைக் கொண்டு நடத்துவித்த அருவருப்பான கூத்தாட்டம் (அதை அழகென்று சில கோமாளிகள் கதைக்கலாம்) முதலிய காட்டு விலங்காண்டிக் கொண்டாட்டங்கள், இறுதியில் ஒரு மணி நேரம் கொளுத்திக் கரியாக்கிய வாண வேடிக்கைக் கூத்தடிப்புகள் இவற்றின் கொடுமைகளையும், கொடும் பொருளழிவுகளையும் எங்கே போய் எவரிடம் கூறி எந்தக் குட்டிச் சுவரில் முட்டிக் கொள்வது?

மொத்தத்தில் இந்த நாட்டு அரசின் முட்டாள்தனத்துக்கும், மூட நம்பிக்கைக்கும், ஆடம்பர ஊதாரித்தனத்துக்கும் ஒரே ஓர் எடுத்துக் காட்டு போதும்!

ஆசிய விளையாட்டு நடைபெறும் பொழுது முழுவதும் வீணாக எரிந்து கொண்டேயிருந்த ஒரு கிணற்றளவுள்ள

(8-ஆம் பக்கம் பார்க்க)

அன்புள்ளம் ஒன்றின்
ஆர்வ மடல்!

துணிவோடு
செயல்படுங்கள்!
துணையிருக்கின்றோம்!

தமிழினக் காவல!
பாவலரேறே!

வணக்கம். நலம். நாடு வதும் அஃதே... 'தமிழ்நிலம்' மலர்ந்து இருக்கின்றது. ஓர் அரை நூற்றாண்டு உங்கள் உழைப்பால் இந்த ஏதிலித் தமிழினத்தை எப்படியும் காப்பாற்றியாகல் வேண்டும் என்ற எண்ணத்தால் உங்கள் உடல், பொருள், உயிர், துய்ப்பு எல்லாவற்றையும் இந்தத் தமிழினத்திற்கே ஈகம் செய்து வருகின்றீர்கள். உண்மைத் தொண்டனைஅவர் உயிர் உள்ளபோது பயன்படுத்திக் கொள்ளாமலும் அல்லது அவர் பாடுகளுக்குப் பயனாய் அமையாமலும் இருந்துவிட்டு இறந்த பின் அவரைத் தூக்கி நிறுத்துவது ஒன்றே தொழிலெனக் கொண்ட இந்தத்தமிழ் மாக்கட்கு உங்கள் உழைப்பை உரமாய் இடுகின்றீர்கள். எதிர்பார்க்கின்ற பயன் எல்லாம் விளையாவிட்டாலும் ஏதோ சிறு பயன் தானும் கிடைக்காமற் போகாது!

நாளை உறுதியாக மலர இருக்கின்ற 'தமிழ் ஈழத்' திருநாட்டைச் சமைக்க விடுதலைப் புலிகளின் பொறுப்பு எவ்வளவு முகாமை வாய்ந்தது. விடுதலைத் தமிழகத்தைச் சமைக்க இருக்கின்ற உங்கள் பணி, ஏற்றிருக்கும் இப்பணிக்கு என்ன என்ன பரிசு, கண்டதம் (தண்டங்கள்) கிடைக்கும் என்பது எல்லோரும் அறிந்ததே. இருந்தாலும் நாளை வரலாற்றில் ஓர் அழியாத தலைவனாகத் தாங்கள் ஆவீர்கள். உலகம் எப்படி இலெனினை, காரல் மார்க்சை, இலிங்கனைப்போற்றுகின்றதோ அது போலத்தான் உங்களையும் போற்றும். என்றாவது ஒருநாள் இந்தத் தமிழகம் விடுதலை பெறத்தான் செய்யும். அப்போது நம் பிறங்கடைகள் உங்கள் வரலாற்றை முகாமையாகப் பயிலும். துணிவோடு செயல்படுங்கள். துணையிருக்கின்றோம்.

நான் இப்போது உ.த.மு.க.வின் ஊரகக் கிளைகள் அமைக்கும் பணியில் உள்ளேன். முகவை வட்டத்தைப் பொறுத்தவரை என்னால் முடிந்ததை உறுதியாகச் செய்வேன். நம் செயல்கள் கொள்கை கோட்பாடுகள் பட்டிதொட்டிகள் எல்லாம் பரவுதல் வேண்டும். உ.த.மு.க வின் செய்தி இதழ் 'தமிழ் நிலம்' எல்லோர் கையிலும் இருக்க வேண்டும். அதற்கான ஆக்கப் பணியில் உள்ளேன். கீழேயுள்ள பாடலை அன்பு கனிந்து 'தமிழநிலம்' இதழில் வெளியிட வேண்டுகின்றேன்.

—மெய் அருண்மொழியன்,
தலைவர், உ.த.மு.க.
முகவை வட்டம்.

தமிழ்கூறும் நெஞ்சங்காள் எழுந்து வாரீர்!

உயிர்கொடுத்துக் குரல்கொடுத்தே உரிமை தன்னில்
ஒருதுளியும் இழக்காமல் மானம் போற்றித்
துயரொழித்துத் தூயதமிழ் வளர்த்த முன்னோர்
துணிவினையும் அறிவினையும் நினைத்துப் பாரீர்!
வயல்செழித்துப் பயன்விளைக்கும் மகிழ்ச்சி போல
வண்டமிழின் நூல்வளத்தால் மகிழ்ச்சி கொண்டார்!
கயல்நிகர்த்த கண்நங்கை கற்பின் மேலாய்க்
காலமெல்லாம் நந்தமிழைப் போற்றி நின்றார்!

அந்தமிழ்தான் இன்றிங்கே அழகு குன்றி
அன்றாடம் கலப்பாலே கற்பி ழந்து
வந்தவர்கள் மொழியாலே துறைகள் தோறும்
வழியின்றித் தானொதுங்கி வாயும் பொத்தி
மந்தநிலை என்கின்ற வலையில் வீழ்ந்து
மாண்புதனை இழக்கிறதே! எண்ணிப் பாரீர்!
வெந்துமனம் நோகிறதே! முந்தைக் காலம்
வீறுடனே வாராதோ? இனிமீ ளாதோ?

காசுபணம் பண்ணுவதில் கவனம் வைக்கும்
கயவர்களின் புன்மனத்தால் காலந் தோறும்
மாசுபல விளைந்தனவே! இழிந்த பன்னூல்
மல்கியிங்கே குவிந்தனவே! தேவை தாமோ?
பூசலினும் நமக்குள்ளே ஓய வில்லை!
புரிவதெந்நாள் தொண்டுகளும்? கனவு தானோ?
ஏகியினி என்னபயன்? உணர்வு மில்லா
எந்தமிழர் எழவில்லை! துன்ப மன்றோ?

திரைப்படத்தால் சீரழியும் தமிழை என்றோ
சீர்திருத்தித் தனித்தமிழாய் மலரச் செய்வார்?
நிறைகுடத்து நீர்போலும் நித்தம் இன்பம்
நேர்தமிழில் ததும்பமொழி ஆக்கம் செய்வார்
கறைபிடித்த வஞ்சகரால் மருத்து வத்தில்
காணவில்லை சொல்லாக்கம்! வெறுக்கின் றோரே!
மறைவடித்த கருத்தினையும் மாய்த்து மிங்கே
மறைவாக எதிர்க்கின்றார் உடனி ருந்தே!

தமிழ்கூறும் நெஞ்சங்காள்! எழுந்து வாரீர்!
தக்கவொரு புரட்சிசெய்து பயனும் காண்போம்!
அமிழ்தாகும் அருந்தமிழைப் போற்றி வாழ்வோம்;
அன்றாடம் புதுமைகளும் நலமும் செய்வோம்!
குமிழ்போலும் நிலையில்லா வாழ்க்கை தன்னில்
குன்றெனவே புகழ்சுட்டத் தொண்டு செய்வோம்!
தமிழ்வாழ வழிசெய்து தூய்மை காப்போம்!
தடுமாறுக் கொள்கையுடன் தாயை மீட்போம்!

— கடலூர் மணிமாறன்

தமிழ் நிலம்

உ. த. மு க. செய்தியிதழ்
கிழமை வெளியீடு (Weekly)

சிறப்பாசிரியர் :
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தனியிதழ் 0.65 காசு

ஆறு மாதக் கட்டணம் (26 கிழமைகள்)	18.00 உருபா
ஓர் ஆண்டுக் கட்டணம் (52 கிழமைகள்)	36.00 உருபா

ஐந்தாண்டுக் கட்டணம்: 175.00 உருபா

ஓரிதழ்க்கு 4 உருபா முன் பணம் கட்டக்கூடிய முகவர்கள் எழுதிக் கேட்க!

அல்லது ஓரிதழ்க்கு 50 காசு மேனிக் கணக்கிட்டு, 20 படிகளுக்கும் அதற்கு மேலும் எத்தனைப் படிகள் வேண்டுமாயினும், அப் படிகளுக்குரிய தொகையை முன் பணமாக விடுத்து இதழ்களைப் பெற்றுக் கொள்க.

அமைச்சர்
தமிழ் நிலம்
5, அருணசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

இந்தியக் கலைப் பண்பாட்டின் ஒருகூறுதான் தமிழ்க் கலைப் பண்பாடா?

★ தமிழர்களின் மொழி, இன, வரலாற்றுக் கலைப் பண்பாட்டுச் சிறப்புகளை அழிக்க முயற்சி செய்யும் வடஇந்திய வல்லாண்மையின் கொடுமைப் போக்கு!

★ உலக ஒன்றியக் கலைப் பேரவை மாநாட்டில் முயற்சி!

✱ தடுத்து நிறுத்தினார் "கூரியர்" முசுத்தபா!

✱ மலேசிய உறுப்பாசிரியர் பாவலர் அ. பு. திருமாலன் தரும் திடுக்கிடும் தகவல்!

கடந்த அக்டோபர் திங்களில் பாரிசு மாநகரில் நடைபெற்ற யுனெசுகோ எனப் படும் உலக ஒன்றிய நாடுகளின் (ஐ நா,) கல்வி, அறிவியல், கலைப் பண்பாட்டு நிறுவனம், வெளியிடும் 'கூரியர்' (தூதன்) தமிழ் திங்களிதழ், தமிழ்ப் பண்பாடு, இலக்கியம் வரலாறு பற்றிய ஒரு சிறப்பிதழை வெளியிட முன்வந்துள்ளது. தமிழ்மொழிக்கும் கலைப் பண்பாட்டு, நாகரீக வாழ்வியல் கூறுகளின் தனித்தன்மைகளை உலக மக்கள் உணர்ந்திட வும் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது தமி ழர்கள் அனைவரும் பெருமைப்படத்தக்கதே.

உலகிலுள்ள மொழிகளில் 'மலாய்' மொழியுட்பட இருபத்தாறு (26) மொழி களிலும் வெளியிடப் பெறும் அச்சிறப் பிதழில் தமிழ்ப் பண்பாடு பற்றிய சிறப் பித்ழும் வெளியிடப் பெறுமென திரு மணவை முசுத்தபா அவர்கள் இந் நாட்டுத் தமிழ் நாளிதழாகிய 'தமிழ் நேய'னுக்களித்த நேருரையில் தெரிவித் துள்ளார்.

ஒவ்வோர் இதழும் ஒரு கலைப் பண் பாட்டு நாகரிகக் கலைக் களஞ்சியமாகத் தோன்றும் 'கூரியர்' ஆசிய மொழிகளில் அரபி, பாரசீகம், இந்து, உருது, சீனம், மலாய, தமிழ் ஆகிய மொழிகளில் மட்டுமே வெளியிடப் பெறும் எனவும் கூறினார்.

தமிழ்மொழிக்குரிய இடத்தைப் பெற்றுத் தர அவருக்கு அவ்வளவு எளிதாகவும் இல்லை என்பதையும், உலக ஒன்றிய நாடுகளின் கல்வி, அறிவியல், கலைப்பண்பாட்டு அமைப் பின் ஒப்புதலைப் பெறவும் இணங்கச் செய்ய வும் அம்மாநாட்டில் அவருக்கு முட்டுக் கட் டையாக விளங்கியவர்கள் வட இந்தியப் பேராளர்களே என்றும் அவர் தெரிவித்தார்.

இருபத்தாறு உலகமொழிகளில் வெளி யிடப்பெறும் அவ்விதழில் தமிழைப் புறக் கணித்துவிட வேண்டும் என்ற நோக்கில் அம்மாநாட்டில் கலந்து கொண்ட வட இந்தியப் பேராளர்கள், **'இந்தியக் கலைப் பண்பாட்டின் ஒரு கூறுதான் தமிழ்க் கலைப் பண்பாடு'** என்றும், 'அது தனிக் கலைப் பண்பாடுடையதன்று' வென்றும் திரு மணவை முசுத்தபா அவர்களுக்கெதிராக அளவையாடி உலகின் மூத்தமொழியும் உயர்தனிச் செம்மொழியுமாகிய அன்னைத் தமிழையும், அதன் வழித் தமிழர் தம் கலைப் பண்பாட்டு வரலாற்றுத் தனித் தன்மைகளை யும் மறைத்துவிட முயன்றுள்ளனர் என் பதை அறிகின்றோம்.

வடஇந்தியப் பேராளர்களின் அம் முட்ட றுக்கும் வஞ்சகத்தையும் உள்ளிருந்தே அணைத்துக்கெடுக்கும் கரவையும் பொய்மைக் கருத்தையும் அலறத்தாக்கி முறியடித்துள்ள ளார். 'உலகிடையே வேறு எந்த மொழிக் கும் இனத்திற்கும் இல்லாத எதிர்ப்பும், அழிப் பும், கீழடைவும் போன்ற எத்தனையோ இடையூறுகளுக்கிடையேயும் தனித் தமிழும் தமிழர் கலைப்பண்பாட்டு வாழ்வியல் வரலாற்றுக் கூறுகள் இன்றும் தனித் தன்மை யுடன் உயிர் வாழ்கின்றன என்று ஆணித் தரமாக எடுத்துரைக்கப் பெற்ற பின்னரே மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பெற்றது என்றும் கூறினரென அறிகின்றோம்.

வட இந்தியக் கரவாளர்களின் வாயை யடக்கி அனைத்துலகவரங்கில் தமிழ்மொழிக் கலைப் பண்பாட்டிற்குரிய இடத்தைப் பெற்றுத் தந்துள்ள அவரது அஞ்சாமையும் துணிவும் போற்றுதற்குரியதாகும்.

தமிழர்களின் தொன்மைவாய்ந்த கலைப் பண்பாட்டு நாகரிக வரலாற்றுண்மைகள் உலக அறிஞர் பெருமக்களின் உள்ளத்தைக் கவர்ந்ததன் காரணியமாகவே, தமிழுக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்பெறாத தும் வழங்கப் பெறாததுமான சிறப்பு உலக ஒன்றிய நாடுகளால் வழங்கப் பெற்றிருக் கிறது என்பதை நம்மால் தெளிவாக உணர முடிகின்றது.

நான் ஓர் இந்தியன் என்றும், எனது மதம் இந்து மதம் என்றும், எனது பண் பாடு இந்தியப் பண்பாடு என்றும் பெருமை யாகக் கூறிக் கொள்ளும் தமிழர்கள், தங் களின் தனித் தன்மையுடைய மொழி, இன, வரலாற்றுக் கலை, பண்பாடு போன்ற வாழ் வியற் கூறுகளை அழித்தும், மறைத்தும் வரும், இந்தியப் பேராய வல்லாண்மையில் கலந்து கரைந்து வரும் நிலையை மேற்கண்ட உலக ஒன்றிய நாடுகளின் மாநாட்டில் வட இந்தியப் பேராளர்களின் நச்சுக் கூற்றில் இருந்து தெளிவடைவார்களா?

ஓரினத்தின் தனித்தன்மைகளையும் இன, மொழி வரலாற்றுக் கூறுகளையும் இழந்து விடக் கூடிய அரசியலாளுமையதிகாரத்தின் கீழ் இயங்கும் தேசிய ஒருமைப்பாடு தேவை தானா? தமிழர்கள் தங்களின் மொழி இனத் தனித் தன்மைகளை இழந்துவிட்டுத்தான் தேசிய ஒருமைப் பாட்டில் கலந்துவிட வேண்டுமென்றால், அப்படிப்பட்டதொரு தேசிய வல்லாண்மைப் பிடிப்பிலிருந்து வெளி யேறிவிட வேண்டுமென்பதே சாலச் சிறந்த தென மேற்கண்ட நிகழ்வு நம் அகவுணர் வைத் தூண்டுகிறதல்லவா?

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலக மக்களை விளித்து மாந்தவியலின் உயரிய பண்பாட்டை விரிந்த நோக்கில் உலக மக்களுக்கு வழங்கிய பண்பு தமிழர் களின் தனித்துயர்ந்த பண்பு. அப் பண்பைத் தொகுத்து வாழ்வியல் மெய்ம்மங்களை ஒரு பாட்டில் வழங்கியவன் கணியன் பூங்குன்றன் என்ற தமிழ்ப்புலவனே என்பதைஅறிவோம்.

இந்தியப் பேராயக் கட்சியின் தலைவியும் தலைமை அமைச்சருமாகிய இந்திரா அம்மை யார் உருசிய நாட்டிற்கு முதன் முதலில் சுற்றுச் செலவு மேற்கொண்ட போது, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது இந்தியப் பண்பாடென்று கூறியதையும், அக்கால் அதைத் தமிழகத் தாளிகைகள் பெரிதுபடுத்தியதுடன் அக்கருத்தை அப் படியே ஏற்று 'இந்தியாவின் பெருமையை இந்திரா அம்மையார் உலகவரங்கில் உயர்த்திவிட்டார் பாரீர்!' என்று பெரு மிதம் கொண்டதும் அறிவோம்.

தமிழர்களின் தனித்துயர்ந்த பண் பாட்டை இந்தியப் பண்பாடாக மாற்றி, அப்பாண்பாட்டிற்குரிய தமிழனை இந்தியப் பேராயத்தில் மறைத்து வருவதும் அழித்து வருவதும்தான் இந்தியப் பண்பாட்டிற்கு உகந்தது என்றால், அந்த ஒருமைப்பாட டுணர்வு தமிழர்களை வெறுமைப் பாட்டிற்கு அழைத்துச் செல்லும் என்பதற்கு இதைவிட வேறு சான்றுகள் வேண்டுமா?

இந்து, இந்தியன் என்ற உணர்வில் ஊறிப் போய்விட்ட தமிழர்கள், தங்களை 'இந்து சங்கத்தினர் என்றும் 'இந்து இளை ஞர் இயக்கத்தினர்' என்றும் 'இந்து சமாசத் தினர்' என்றும், பல்வேறு பெயரில் இயக்கங் கள் தோற்றுவித்துக் கொண்டு, தங்களின் மொழிக்கும் இனத்திற்கும் வாழ்வியல் கலைப் பண்பாட்டியலுக்கும் உண்மையான மீமிசை யுணர்வையூட்டவல்ல தமிழர் சமயநெறி களுக்கு மாறானதும் முரண்பாடான துமான கோட்பாடுகளில் தங்களின் தனித் தன்மைகளைத் தாங்களே அழித்துக் கொண்டு வருவதையும், இஞ்ஞாலத்தில் எந்தெந்த

(5-ஆம் பக்கம் பார்க்க)

என்னினம் தேரட்டும் !

ஆர்த்த முனையியல் போர்த்த பகைகளை
ஆய்ந்து துரத்தட்டுமே !—தமிழ்
சீர்த்த புறவியல் கூர்த்த மதிகளைச்
சீவி எரிக்கட்டுமே! — உடல்
வேர்த்த சுவடியல் தூர்த்த குணங்களை
வீசி அழிக்கட்டுமே !—அறம்
வார்த்த அறிவியல் சேர்த்த கறைகளை
வாரிப் புதைக்கட்டுமே !

தமிழ்நிலம் என்பதைத் தன்நிலம் என்றெம
தார்ப்புகள் காட்டட்டுமே ! யாம்
உமியல வென்பதை உட்படு பொன்மணி
உய்ப்புகள் நீட்டட்டுமே !—உளம்
திமி-திமி யென்பதைத் தீக்கனல் கொள்வதை
தீட்டி உரைக்கட்டுமே ! — இனி,
கும்-கும் என்பதைக் கும்மியும் வண்ணமும்
கூறட்டும் கூறட்டுமே !

ஈழம் மலேசியம் சிங்கையம் சாவகம்
என்றுள நாடுகளும்,—வருங்
காலம் எதுவெனக் கண்ணீர்க் கதைசொலும்
அந்தமான் தீவுகளும்,—இனும்
ஞாலம் பரவிய நற்றமிழ்ப் பேரினம்
நண்ணிய வீடுகளும்,—பெரும்
வேழப் படையென வெற்றிக் கொடிகளை
ஏந்தட்டும் ஏந்தட்டுமே !

ஆயிர மாயிரம் ஆண்டுகள் எம்மினம்
ஆழ்ந்து கிடந்ததெல்லாம் ;—வரும்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் எம்மினம்
ஆள நினைப்பதெல்லாம் ;—ஒரு
பாயிர மாக்கியே பார்க்கவென் பாவுளம்
பாட நினைத்ததெல்லாம் ;—தமிழ்த்
தாயின் முலையின்பால் தந்த உணர்வெனும்
தன்மையைக் காட்டட்டுமே !

தென்மொழி எம்முயிர்த் தேன்மொழி என்பதைத்
தே. நே. உரைத்தது-முன்;—அப்
பொன்மொழி வாய்மையைப் பாவல ரேறைய
போற்றித் தொழுவது - முன்,—தனிச்
சொன்மொழி ஆய்வியல் தொட்டுப் பயிற்றுமெம்
தூய்தமிழ் வாணரின்-முன்,—உல(கு)
என் நா வளவோர் துமியள வென்பினும்,
என்னினம் தேரட்டுமே !

— கோவி. மணிதாசன்.

தமிழ் மொழி, தமிழினத்திற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தொண்டினைப் பின்பற்ற வேண்டும் !

—o—

தமிழகத் தமிழாசிரியர் கழகத் தலைவர் த. முருகேசனார் கருத்து

கல்லக்குறிச்சி: திசம். 4— கடந்த 28—11—82 அன்று கல்லக்குறிச்சி வட்டத் தமிழாசிரியர் கழகம், புலவர்கள் திரு. சி. மாணிக்கம், திரு. இளந்திரையன், திரு. க. சண்முக சுந்தரம், திரு. ப. சொக்கலிங்கம் ஆகியோருக்குப் பாராட்டு விழா நடத்தியது.

கல்லக்குறிச்சி வட்டத் தமிழாசிரியர் கழகத் தலைவர் புலவர் திரு. செ. வரதராசனார் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழகத் தமிழாசிரியர் கழகத் தலைவர் புலவர் திரு. த. முருகேசனார் கலந்து கொண்டு பேசினார்.

அவர்கள் தம் உரையில், 'தமிழாசிரியர்கள் வெறும் ஆசிரியர்களாக மட்டும் அல்லாமல், மொழி, இன உணர்வினைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்துக்கும் ''தமிழ் நிலம்'' வழிப் பெருந்தொண்டு செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு தமிழ் ஆசிரியர்களாகிய நாமெல்லாரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதோடு அத்தகைய உணர்வுகளை நாம் பெறவேண்டும் எனக் குறிப்பிட்டுப் பேசினார்.

மறுபடியும் மணிபவள நடை

—தி குமரப்பன் க இ.—

கழகக் காலத் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கு வட சொற்கள் விரவிக் கிடக்கின்றன, இன்னும் பின்னோக்கிச் சென்றால் தூய தமிழ் மணம் கமழாமற் போகாது. தொன்மை இலக்கியங்கள் கிடைக்கப் பெறுமை தமிழுக்குப் பேரிழப்பே !

கழகக் காலத்திற்குப் பின் கலப்பு மிகுதியாகி விட்டது. பல்வேறு மொழி, இன, பண்பாட்டு நாகரிகக் கலப்பால் தமிழ் மொழி பெரிதும் தாக்குண்டது.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே !''

என்ற நூற்பாவின் போர்வைக்குள் மொழிக் கலப்பு பல்கிப் பெருகியது. பாரசீகம், அரபி, போன்ற மொழிச் சொற்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டன. ஆனால் வடமொழியோ திட்டமிட்டு வலிந்து புகுக்கப்பட்டது. நாளடைவில் 'தமிழ்' என்றால் பெயருக்குச் சில தமிழ்ச் சொற்கள் இருக்க எண்பது, தொண்ணூறு விழுக்காடு பிறமொழிச் சொற்கள் - அவற்றிலும் அளவிறந்த வடமொழிச்சொற்கள் தாம் கலந்திருக்கும்.

இதை மணிபவள (மணிப்ரவாள) நடை என்று சிறப்பித்துக் கூறி அந்த நடையை வளர்த்துப் போற்றியது ஒரு கூட்டம்.

காலத்தின் கட்டாயத்தால் தனித் தமிழ் இயக்கம் தோன்றி வளர்ந்தது. சூரிய நாராயண சாத்திரியார் என்ற பரிதிமாற் கலைஞர், வேதாச்சலம் என்ற மறைமலையடிகள், திரு. வி.க. போன்றவர்களின் தனித்தமிழ்த் தொண்டு குறிப்பிடத்தகுந்தவையாகும். தமிழ்மலை மறைமலையடிகளுக்குப் பின் ஆரியக் கொட்டத்தை அடக்குவதில் பெரும் பணியாற்றியவர் காலம் சென்ற ஐயா பாவாணர் அவர்கள். அவர்களின் வழித் தோன்றலாக இருந்து தனித்தமிழ் இயக்கத்தின் அச்சாணியாகத் திகழ்பவர் பாவலரேறு அவர்களாவார்கள்.

ஆரியப்பாம்பு எவ்வளவுதான் அடிபட்டாலும் சொஞ்சம் உயிர் இருந்தாலும் காற்றைக் 'குடித்து'க் கொண்டு தலை தூக்கிவிடும். இன்று வடமொழி 'புதுப்பா' (புதுக்கவிதை) என்ற வடிவத்தில் புகுந்து விளையாடத் துவங்கியிருக்கிறது.

'புதுப்பா' என்பதை யாரும் வெறுக்கவில்லை. வெறுக்க வேண்டிய தேவையும் இல்லை. கருத்தை வெளியிடுவதில் எத்தனையோ இலக்கிய வகைகளில் இதுவும் ஒன்று. உரைநடையிலேயே உயர்ந்த வகை என்று கொள்ளலாம். ஆனால் 'புதுப்பா' என்று பா வகையில் சேர்ப்பது சரிதானா என்பதில் கருத்துவேறுபாடு இருக்கலாம். மற்றபடி அந்த அமைப்பில் கருத்தை வெளியிடத் தடையில்லை.

ஆனால் இன்று வெளிவரும் 'புதுப்பா'க்களைக் கண்டால் ஆரியத்திடம் விலை (சோரம்) போகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

'வானம் பொழிந்தது' என்றால் உரைநடையாம். 'வானம் வர்ஷித்தது' என்றால் புதுப்பாவாம். இவர்களுக்கு 'வா'வுக்கு 'வ' வரவேண்டும் என்பதற்காக மொழிக் கொலையை ஏற்றுக் கொள்ள முடியுமா?

''புஷ்பித்தது, பிரசவித்தது, ஸ்பரிசம், வருஷம்' என்று வரிக்கு வரி வட சொல்லைக் கலந்து எழுதுவதுதான் 'புதுப்பா' என்று போற்றுகிறார்கள்.

இந்நிலை நீடித்தால் மொழிக்கொலை செய்து வரும் அவர்கள் பெரும் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிப்பது நம் கடமையாகிறது.

இது தனிப்பட்ட யாரும் யாருக்கும் விடுக்கும் அறைகூவல் அன்று. காலத்தின் கட்டாயம். அந்த எதிர்ப்பு வெடிக்கும் நாள் தொலைவில் இல்லை !

மொழிக் காப்பு இன்று புதுப்பாவின் உயிர்நாடியாக இருக்கிறது. மொழிக் கொலையின்றிப் புதுப்பா எழுத முடியாதா ? எண்ணிப் பார்ப்பார்களாக !

இந்தியக் கலைப் பண்பாட்டின் ...

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளில் தமிழர்கள் வாழுகின்றார்களோ அங்கெல்லாம் காணலாம்

அண்மையில் இந்நாட்டில் நடைபெற்ற இந்து சங்கத்தின் மாநாட்டில்; ஆண்டறிக்கை வெளியிட்டு, அச்சங்கப் பேராளர்களிடையே 'இந்து சங்கத்தின் அதிகார மொழி ஆங்கிலமா ? தமிழா?' என வினாக்கள் எழுப்பவும்; அதனை நாளிதழில் வெளியிட்ட பின்னர், மீண்டும் அச்'சங்க'த்தின் செயலாளர் முதன்மை மொழி தமிழ் தான் என்று விளக்க முனைந்து, 'தமிழில் வெளியிடப்பெற்ற அறிக்கையில் உள்ள பொருளையே ஏற்றுக் கொண்டு தமிழ் அறிக்கையை ஆங்கில அறிக்கைக்கு ஏற்ப திருத்திக் கொள்ளவும்' என்று தாம் அம் மாநாட்டுக் கூட்டத்தில் கூறியதாக ஒப்புக் கொள்கிறார்.

இந்து சங்கத்திற்கு தமிழ்தான் முதன்மையான மொழி என்றால், ஆங்கிலத்தில் அறிக்கை வெளியிடுவதும பின்னர் ஆங்கிலத்தில் வெளியிடப் பெற்ற அறிக்கை தான் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று கூறுவதும் எத்தகைய முரண்பாடான செயல்.

இந்து சங்கத்தின் அதிகாரமொழி ஆங்கிலம் என்பதும், அச்சங்கத்திலுள்ள தமிழ் மொழி உணர்வாளர்களை ஓரளவு அமைவு படுத்தவே. அவர்கள் தமிழிலும் அதுவும் அவர்களாலேயே ஒப்புக் கொள்ளப் பெற்ற பிழைகள் மலிந்த அறிக்கையைத் தந்து விட்டனர் என்பது தெளிவு.

ஆங்கில அறிக்கையின் மொழியாக்கத்தையே தமழறிக்கையாகத் தந்துவிட்டுத் தமிழ்தான் இந்து சங்கத்தின் முதன்மையான மொழி என்று கூசாமல் கூறுவது எத்தகைய பித்தலாட்டத்தனம் என்பதைத் தமிழர்கள் சிந்தித்து உணர்வார்களா ?

தமிழ் தான் இந்து சங்கத்தின் முதன்மையான மொழி என்று கூறும் அவர்கள் அச்சங்கத்தின் இறை அடையாளமாக ஓம் என்னும் வடிவத்தை வடமொழி வடிவத்தில் கொண்டிருப்பதும், அதனைத் தமிழ் வடிவத்தில் கொண்டு வரும்படி பேராளர்களே கேட்டுக் கொள்வதும் ஏன் ? இந்த அழகில் தமிழ்தான் முதன்மொழி என்பதும் அதிகார மொழி என்பதும் ஏமாற்று வேலையன்றி வேறெதுவாக இருக்க முடியும் என்பதைத் தமிழர்கள் நன்குணர வேண்டும்.

''உறுப்பினர்களில் தொண்ணூறு (90) விழுக்காட்டினர் தமிழர்களாக இருப்பதால் நடைமுறையில் தமிழையே முதன்மை மொழியாகச் சங்கத்தின் பொறுப்பாண்மைக் குழு பயன்படுத்துசிறது'', என்று வேறு கூறுகிறார். நடைமுறையில் 'என்று கூறுவது' அதிகாரமற்ற முறையில் எனப் பொருள் தருகிறதன்றோ ? இல்லை எனில் ஆங்கில அறிக்கையை ஏற்றுக்கொள்ளக் கூறுவது ஏன் ?

தொண்ணூறு (90) விழுக்காட்டு உறுப்பினர்களைக் கொண்ட தமிழர்கள், இந்து சங்கம் என்னும் பெயரால், தங்கள் மொழியையும் இன உணர்வையும் எஞ்சியுள்ள பத்து (10) விழுக்காட்டினருக்காக அழித்துக் கொள்ளக் கூடிய நிலையைத் தமிழர்களிடையேயல்லாமல் உலகில் வேறு இனத்தினரிடையேயாவது காணமுடியுமா ?

மதஉணர்வால் முற்றிலும் மாறிவிட்ட தமிழனை அவனது தாய்மொழி தமிழ்தான் காத்து வருகின்றது. இந்து, இந்தியன், இந்தியப் பண்பாடு போன்ற உணர்வுகளைத் தூண்டி வரும் மதவுணர்வு, தமிழ், தமிழன், தமிழ்ப் பண்பாடு போன்ற தனித் தன்மைகளுக்கு ஊறு செய்து வருவதை உணராவிட்டால், வருங்கால வரலாற்றில் தமிழன் இடம்பெற மாட்டான் என்பது முக்காலும் உண்மை, எனவே இன்றே தமிழ், தமிழினத் தனித்தன்மைகளைக் காப்பதில் முனைவோம்.

— பாவலர், அ. பு. திருமாலன்
செலாமா, பேராக், மலேசியா.

வானொலி திருந்துமா ?

• தெலுங்குப் பாடல்களையும் இந்தித் திரைப்படப் பாடல்களையும் இடைவிடாது ஒலிபரப்பியும், தமிழ்த் திரைப்படப் பாடல்களுக்கு இந்தியில் முன்னறிவித்தும், இந்தி ஆங்கிலச் செய்திகளுக்கு முன்னாலும் பின்னாலும் இந்தி விளம்பரங்கள் செய்தும், அனைத்திந்திய 'வானொலி நிலையம்' எனத் தமிழில் கூறுவதற்குக் கூசி 'ஆல் இண்டியா ரேடியோ' என்று அறிவித்தும் வருகின்ற வானொலி தமிழுக்கு ஆக்கம் தராததோடு கேடும் சூழ்ந்து வருகிறது.

'செய்திகள் வாசிப்பது இன்னார்' எனத் தில்லியிலும், 'மாநிலச் செய்திகள் வாசிப்பது இன்னார்' எனச் சென்னையிலும் படிக்கின்றனர். 'வாசிப்பது' என்பதில் 'து' விகுதி அஃறிணைக்குரியது; 'இன்னார்' என்னும் பெயர்ப் பயனிலை உயர்திணை ஆகலின் 'வாசிப்பவர்' அல்லது 'படிப்பவர்' என வருதல் வேண்டும். எனவே 'மாநிலச் செய்திகள் படிப்பவர்' என வானொலி ஒலிக்குமா? தமிழுக்குக் கேடு சூழும் இந்திய வானொலி நிலை திருந்துமா?

தஞ்சை. பா. இறையரசன் க.மு

கடையநல்லூர் நிகழ்ச்சிபற்றி ஒரு கருத்தாய்வு!

(கடந்த 25—9—82 அன்று கடையநல்லூரில் நடந்த உ. த. மு. க. தொடக்க விழாவில் பாவலரேறு ஆற்றிய நெருப்புச் சொற்பொழிவு பற்றி, உ. த. மு. க. நெல்லை மாவட்டம் (வடக்குப் பகுதி) செயலாளர் திரு. அ. தமிழன்பன் அவர்கள், அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த அறிஞர் சிலரை அணுகி, அச்சொற்பொழிவு பற்றி அவர்களின் கருத்துரைகளைக் கேட்டு அவற்றைத் தொகுத்து எழுதியுள்ளார். நம் கருத்துகளை அரசியல் சார்பற்ற நடுநிலை உணர்வுள்ளவர்கள் எவ்வாறு மதிப்பிடுகிறார்கள் என்பதையறிய, இக் கருத்துரைகள் பயன்படும் என்பதால், அவை இங்கு வெளியிடப் பெறுகின்றன)

மதிப்பிற்குரிய ஐயா பாவலரேறு அவர்களுக்குத் தங்கள் அன்புச் செறிவுகளை என்றும் மறவா தமிழ்நெஞ்சம் அ. தமிழன்பன் வரையும் மடல்.

தங்களின் கடையநல்லூர் நிகழ்ச்சி பற்றி ஓர் உ. த. மு க. தொண்டன் என்ற முறையில் ஒரு சிறு ஆய்வு நடத்தினேன். அந்த ஆய்வில் சில தமிழ்மொழிப் பற்றாளர்களிடம் அவர்கள் கருத்துகளைக் கேட்டேன் அவற்றைக் கீழே முறைப்படுத்துகிறேன்:

(அ) சேக்கிழார் கனோசன் கருத்து:

"நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் படித்தவன். நான் அந்த நாளில் நம "மொழி ஞாயிறு" திரு. தேவநேயப்பாவாணர் அவர்களின் செந்தமிழுரை, தூவல் முனையின் ஆற்றல் இவற்றை ஓரளவு அறிந்தவன். அன்னாரின் முதல் மாணாக்கர் "பாவலரேறு" அவர்களை— இவ்வளவு ஒரு பெரிய ஆற்றல் உள்ள தமிழ் மறவனைக் காணும் பெருமை கிட்டும் என்று எண்ணியதே இல்லை? நான் என்னுடைய தமிழ் வாழ்வில் இப்படி ஒரு திறமையான ஓர் அறிஞரைக் கண்டதேயில்லை. நான் பேராயக் கட்சியைச் சார்ந்தவனாக இருப்ப நால் முதலில் அந்த முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த முன்னேற்றக் கழகத்திற்கும் எவ்வளவு இடைவெளி, நெருக்கம் இருக்கும் என்று நான் எழுப்பிய வினாவுக்கு இனம், மொழி ஆகிய இரண்டும் தான் இக்கழகத்தின் முன்னேற்றம் என்று விடை கிடைத்ததும் என்னுள் ஓர் ஏக்கம் கலந்த வருத்தம்! இப்படி ஓர் இளமானத் தலைவனை இந்த பழகம் இவ்வளவு காலம் தலைமைப்படுத்தாமல் விட்டு விட்டதே. இனிமேல் என் உயிர்மூச்சுள்ளவரை அவர் அடியொற்றுவதே என் பணியாகும்" என்று ஆணித்தரமாக உணர்வு பொங்கிடக் கூறினார்கள்.

புலவர். கா. பழநியப்பன், தமிழ் ஆசிரியர், கருத்து.

"நான் திராவிட இயக்கத்தைப் பெரிதும் விரும்புவன். இந்தத் தமிழினம் (திராவிட இனம்) தந்தை பெரியாருக்குப் பின், பேரறிஞர் அண்ணாவுக்குப்பின் முறையான (சரியான) தலைமை இல்லாமல் தவிக்கின்ற இத்தகு காலத்தில் உரிய நேரத்தில் உயிரூட்ட வந்துள்ளது உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.

அது மட்டுமன்று; சொல்லாற்றல், தூவல் முனையின் எழுத்தாற்றல், அஞ்சாமை, துஞ்சாமை, நெஞ்சுரம், நேர்மை, பொறுமை, வாய்மை இவை அனைத்தும் ஒட்டு மொத்தமாகக் கொண்டவர் 'அண்ணா' அவர்கள். அன்னாரை மிஞ்சும் வகையில் பாவலரேறு அவர்கள் அனைத்துப் பொருள்களிலும் விஞ்சி நிற்பதாக நான் கற்ற தமிழ் மூலம் அறிகிறேன்.

சாதிபேத மற்ற ஒரு நிகரற்ற குமுகாயத்தைப் பாவலரேறு ஒருவரால் தான் அமைக்க முடியும். சொல்லுக்கும் செயலுக்கும் ஆயிரம் தெளிவுரை ஆற்றும் வல்லுநர் பாவலரேறுக்கு நிகர் அவரே" என்று அவர் தம் கருத்துகளைக் கனிவுடன் நயமாகக் கூறினார்கள்,

(இ.) திவான் சாகிபு என்றும் தேநீர் விற்கும் தெரு வாணியர் கருத்து!

நான் தற்செயலாக அந்தப் பக்கம் வந்தேன். அங்கு ஒலி பெருக்கி ஒலித்தது. உள்ளே வந்து பார்த்தேன். யாரோ ஒருவர் தமிழ் உரையாற்றுகிறார் என்று எண்ணி நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டு இருந்தேன். சற்று நேரம் கழிந்தவுடன் அருகில் இருந்தவரிடம் கேட்டேன் யார் இவர் என்று. அதற்கு விடையாக இவர் தான் "பெருஞ்சித்திரனார்" என்றார்கள்.

ஐயா அவர்கள் இந்த மண்ணிற்கு ஏன் 'பரத கண்டம்' எனப் பெயர் வந்ததென்பதற்கும், 'குமரிக் கண்டம்'த்திற்கும் விளக்கம் தந்ததையும் எண்ணினால் இப்படி ஓர் அறிஞர் இவ்வளவு காலம் என்ன செய்தார் எங்கு இருந்தார், என்று எனக்குள்ளேயே வினா எழுப்பிக் கொண்டேன் அது மட்டு மன்று. அவர் தெளிவான விளக்கத்தோடு சொற்பொழிவு ஆற்றியதையும், பாவேந்தர் பாடலை இசைத்ததையும் எண்ணுவதுடன் ஒப்போலைக்காக நான் உங்களை நாடி வரப்போவதில்லை என்ற உறுதியான அறிவிப்புச் செய்ததையும் பார்த்தால் இவர் தான் நம் நாட்டையும், மொழியையும் ஆள்வதற்குத் தகுதி வாய்ந்த தமிழ்மறவன் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து இன்று முதல் நான் இந்த இயக்கத்திலே என்னை இணைத்துக் கொண்டேன்" என்று தம் கருத்தை விறுபொங்கத் தெளிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஈ.) பாண்டி வளவன் அறி. இ. க.மு அவர்கள் கருத்து.

"நான் தென்மொழியையும் ஐயாவையும் நன்கு அறிந்தவன். ஆனால் அவர்கள் கொள்கையில் "இணைந்தவன் இல்லை" என்று அறிவிக்காதவரை இந்த இயக்கம் வெற்றியடைய முடியாது. நான்கு இலக்கம் தமிழ் மறவர்கள் தேவை நம் விடுதலை இயக்கம் வெற்றி பெற! ஆகையால் ஐயா அவர் கள் இறைச் சார்புக் கொள்கையில் தெளிவான அறிவிப்பை வெளியிட்டால் நான் என்னை இவ்வியக்கத்தில் இணைத்துக் கொள்கிறேன்" என்று மாறுபட்ட கருத்தை வெளிப்படுத்தினார்.

என் கருத்துரை ஆய்வு!

★ மேற்கண்ட அன்பர்களின் கருத்தில் என்னை மிகவும் கவர்ந்தது புலவர். திரு. கா. பழநியப்பன் அவர்கள் கருத்தும், திவான் சாய்பு என்னும் தேநீர் விற்பனையாளரின் கருத்துந்தாம்! அவர்கள்தாம் உண்மையான உ. த. மு. க. தொண்டர்களாகப் பணியாற்ற முடியும் என்பது என் தாழ்மையான கருத்து. ஆகவே என்னுடைய ஆய்வு பற்றித் தங்கள் மதிப்பீட்டினை நான் தங்கள் மேலான பணிகளுக்கிடையே தங்கள் மதொண்டன் என்ற முறையில் அறிய விரும்புகிறேன்.

— அ. தமிழன்பன், கடையநல்லூர்.

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"வள்ளற் பெருமான் என்னும் இராமலிங்க அடிகளின் காலம் என்ன அண்ணா?"

"1823 முதல் 1874 வரை"

"அவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வடலூரிலும் மேட்டுக்குப்பத்திலும் வாழ்ந்தவர் தாமே?"

"ஆமாம்."

"பல ஆயிரக்கணக்கான பாடல்களைத் தமிழில் எளிமையாகவும் இனிமையாகவும் பாடியவர் தாமே அவர்?"

"ஆமாம்"

"அவருக்குப்பின் 1882இல் பிறந்து 1921 வரை வாழ்ந்த பாரதியார் தென்னார்க்காடு மாவட்டத்தை அடுத்த புதுவையில் இருந்தவர் தாமே?"

"ஆமாம்."

"அவர் ஏன் அண்ணா வள்ளற் பெருமானைப் பற்றி ஒருவரியும் எழுதவில்லை?"

"நீயே சொல் தம்பி!"

"வள்ளற் பெருமான் நம்மவர்களைக் கொண்டே ஆண்டவருக்கு வழிபாடு செய்ய வேண்டும் என்று சொன்னவர்: வேத ஆகம இதிகாச புராணங்களில் இலட்சியம் வைக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியவர்; சாதி சமய ஆசாரங்களைக் கண்டித்தவர்; ஆரிய மொழியைவிடத் தென்மொழியே தலை சிறந்தது என்று கூறியவர் - என்பதால் தானே, அண்ணா, பாரதியார் அவரைப் பற்றி ஒரு வரியும் எழுதவில்லை?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

— தமிழவேள்.

தெரியுமா செய்தி......!

1. ஒட்டகத்தின் முதுகு வளைந்துள்ளது. ஆனால் முதுகெலும்பு நேராகத்தானுள்ளது.
2. நம் நில உலகில் 8,40,000 இற்கும் மேற்பட்ட விலங்கு வகைகள் வாழ்கின்றன,
3. உலகத்தின் மிகப் பெரிய நிலத்திணை சிமிகயா. இதன் உயரம் 117 மாத்திரி.
4. திமிங்கிலத்தின் குட்டி பிறக்கும் போதே ஏறத்தாழ ஏழு மாத்திரி நீளமிருக்கும். வளர்ந்த திமிங்கிலம் 30 மாத்திரி நீளத்திற்கும் மேல் இருக்கும்.

—இளஞ்சேரல் முதுபாண்டியன்.

தமிழ்ப் பெயர் மாற்றமும் சிதைவும்!

— அறிவின் முனைவன —

தமிழ் கூறும் நல்லுலகில் மாற்றரசுகள் ஏற்பட்டன. மாற்றரசைச் சார்ந்த அரசுகள் இருந்தன.

தற்போது ஆளுகின்ற அரசும் தன்னை மாற்றரசு சார்ந்த அரசு அல்லது தன் னரசு என்று சொல்லிக் கொள்ள முடியாது அவல நிலையில் இருக்கிறது. இருப்பினும் தமிழ்நாட்டில் தமிழாட்சி நிலவ ஆர்வம் காட்டுவது வரவேற்கத் தக்கது.

வேதாரண்யம், 'திருமறைக் காடா'னது; கும்பகோணம், 'குடந்தை' ஆகியது; மாயூரம் 'மயிலாடுதுறை'யானது சிறந்த மாற்றங்கள். தமிழ்நாட்டில் சிறந்த தூய தமிழ் வரலாற்றுப் பெயர்கள் மாற்றப்பட்டும் சிதைக்கப்பட்டும் வழங்குகின்றன.

இவற்றைக்களைந்து மாற்றியும், திருத்தியும் நேரிய நிலைக்குக்கொண்டு வருதல் மிகவும் தலையாய கடமையாகும்.

அந்தநல்லூர் என்னும் ஊர்ப் பெயர் அருந்தவ நல்லூரின் சிதைவு. திருப்பராய்த் துறை, திருஆலந்துறை, திருச்சேந்துறை என்பன காவிரிக் கரையில் அமைந்த ஊர்ப் பெயர்கள். திருஆலந்துறை மறைந்து போய் அந்த நல்லூராக வழங்குகிறது. திருச்சேந்துறை சிதைந்து திருச்செந்துறையாக வழங்குகிறது. நம் முன்னோர்கள் பெயர்களைக் கருத்தாழம் மிக்கனவாக அமைத்தார்கள். அவற்றை மாற்றும் போதும் சிதைக்கும் போதும் அவற்றின் பொருள்களும் கெடுகின்றன; இந்நிலை மக்களின் எண்ணுவதெல்லாம் உயர்வாக எண்ணுதல் என்ற மனப்பக்குவத்தை அழிக்கிறது. தன் பெயரிலும், தம் ஊரின் பெயரிலும் இருக்கும் சிறப்பை அறியாததால் தான் கீழ்த்தரமான, அருவருப்பான பெயர்களைச் சூட்டித் தாழ்ந்து கீழ்ப்பட்டு உழன்று அழிந்த நிலையில் இன்று வாழும் நிலை உள்ளது.

குளிர்தண்டலை குளித்தலையாகச் சிதைந்தது. குளித்தலையும் கூத்தாலையாகச் சிலர் வாயில் நறநறக்கிறது. கடம்பர் கோயில் முற்றிலா முலையம்மை இயற்கைப் பெயர். பாலகுஜாம்பாள் என் மாற்றத்தால் என்ன அழகை அல்லது எந்த மறைப்பைக் கண்டார்கள்? பேட்டைவாய்த்தலை Pettavathalai ஆக ஆங்கிலத்தில் எழுதப்பட்டுப் பெட்ட வாய்த்தலையாக அருவருக்கும் தமிழில் திரும்ப மொழி பெயர்க்கப்பட்டு நகருந்து தலைப்புகளில் பொறிக்கப்பட்டு உலா வருகிறது. இப்படி ஆக்கிய அறிவாளர்களை என்னென்பது?

ஊர்ப்பெயர்கள், கோயிலில் உள்ள திரு உருப் பெயர்கள், மாந்தர்களின் தனிப் பெயர்கள், பல துறைப் பெயர்கள் மாற்றப்பட்டும் சிதைக்கப்பட்டும் வழங்குவதைத் திருத்தியும் செப்பம் செய்தும் வழங்க, தமிழர்கள் முன்வரல் வேண்டும்.

கடையநல்லூர் நிகழ்ச்சிபற்றி ஒரு கருத்தாய்வு!

(கடந்த 25—9 82 அன்று கடையநல்லூரில் நடந்த உ. த. மு. க. தொடக்க விழாவில் பாவலரேறு ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவு பற்றி, உ. த. மு. க. நெல்லை மாவட்டம் (வடக்குப் பகுதிச்) செயலாளர் திரு. அ. தமிழன்பன் அவர்கள், அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த அறிஞர் சிலரை அணுகி, அச்சொற்பொழிவு பற்றி அவர்களின் கருத்துரைகளைக் கேட்டு அவற்றைத் தொகுத்து எழுதியுள்ளார். நம் கருத்துகளை அரசியல் சார்பற்ற நடுநிலை உணர்வுள்ளவர்கள் எவ்வாறு மதிப்பிடுகிறார்கள் என்பதையறிய, இக் கருத்துரைகள் பயன்படும் என்பதால், அவை இங்கு வெளியிடப் பெறுகின்றன)

மதிப்பிற்குரிய ஐயா பாவலரேறு அவர்களுக்குத் தங்கள் அன்புச் செறிவுகளை என்றும் மறவா தமிழ்நெஞ்சம் அ. தமிழன்பன் வரையும் மடல்.

தங்களின் கடையநல்லூர் நிகழ்ச்சி பற்றி ஓர் உ. த. மு க. தொண்டன் என்ற முறையில் ஒரு சிறு ஆய்வு நடத்தினேன். அந்த ஆய்வில் சில தமிழ்மொழிப்பற்றுளர்களிடம் அவர்கள் கருத்துகளைக் கேட்டேன் அவற்றைக் கீழே முறைப்படுத்துகிறேன்:

(அ) சேக்கிழார் கணேசன் கருத்து:

"நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் படித்தவன். நான் அந்த நாளில் நம "மொழி ஞாயிறு" திரு. தேவநேயப்பாவாணர் அவர்களின் செந்தமிழ்உரை, தூவல் முனையின் ஆற்றல் இவற்றை ஓரளவு அறிந்தவன். அன்னாரின் முதல் மாணாக்கர் "பாவலரேறு" அவர்களை— இவ்வளவு ஒரு பெரிய ஆற்றல் உள்ள தமிழ் மறவனைக் காணும் பெருமை கிட்டும் என்று எண்ணியதே இல்லை? நான் என்னுடைய தமிழ் வாழ்வில் இப்படி ஒரு திறமையான ஓர் அறிஞரைக் கண்டதேயில்லை. நான் பேராயக் கட்சியைச் சார்ந்தவனாக இருப்பதால் முதலில் அந்த முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த முன்னேற்றக் கழகத்திற்கும் எவ்வளவு இடைவெளி, நெருக்கம் இருக்கும் என்று நான் எழுப்பிய வினாவுக்கு இனம், மொழி ஆகிய இரண்டும தான் இக்கழகத்தின் முன்னேற்றம் என்று விடை கிடைத்ததும் என்னுள் ஓர் ஏக்கம் கலந்த வருத்தம்! இப்படி ஓர் இனமானத் தலைவனை இத்தமிழகம் இவ்வளவு காலம் தலைமைப்படுத்தாமல் விட்டு விட்டதே. இனிமேல் என் உயிர்மூச்சுள்ளவரை அவர் அடியொற்றுவதே என் பணியாகும்" என்று ஆணித்தரமாக உணர்வு பொங்கிடக் கூறினார்கள்.

புலவர். கா. பழநியப்பன், தமிழ் ஆசிரியர், கருத்து.

"நான் திராவிட இயக்கத்தைப் பெரிதும் விரும்புவன். இந்தத் தமிழினம் (திராவிட இனம்) தந்தை பெரியாருக்குப் பின், பேரறிஞர் அண்ணாவுக்குப்பின் முறையான (சரியான) தலைமை இல்லாமல் தவிக்கின்ற இத்தகு காலத்தில் உரிய நேரத்தில் உயிரூட்ட வந்துள்ளது உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.

அது மட்டுமன்று; சொல்லற்றல், தூவல் முனையின் எழுத்தாற்றல், அஞ்சாமை, துஞ்சாமை, நெஞ்சுரம், நேர்மை, பொறுமை, வாய்மை இவை அனைத்தும் ஒட்டு மொத்தமாகக் கொண்டவர் 'அண்ணா' அவர்கள். அன்னாரிடமிருந்து பாவலரேறு அவர்கள் அனைத்துப் பொருள்களிலும் விஞ்சி நிற்பதாக நான் கற்ற தமிழ் மூலம் அறிகிறேன்.

சாதிபேத மற்ற ஒரு நிகரற்ற குமுகாயத்தைப் பாவலரேறு ஒருவரால் தான் அமைக்க முடியும். சொல்லுக்கும் செயலுக்கும் ஆயிரம் தெளிவுரை ஆற்றும் வல்லுநர் பாவலரேறுக்கு நிகர் அவரே" என்று அவர் தம் கருத்துகளைக் கனிவுடன் நயமாகக் கூறினார்கள்,

(இ.) திவான் சாகிபு என்னும் தேநீர் விற்கும் தெரு வாணிகர் கருத்து!

நான் தற்செயலாக அந்தப் பக்கம் வந்தேன். அங்கு ஒலி பெருக்கி ஒலித்தது. உள்ளே வந்து பார்த்தேன். யாரோ ஒருவர் தமிழ் உரையாற்றுகிறார் என்று எண்ணி நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டு இருந்தேன். சற்று நேரம் கழிந்தவுடன் அருகில் இருந்தவரிடம் கேட்டேன் யார் இவர் என்று. அதற்கு விடையாக இவர் தான் "பெருஞ்சித்திரனார்" என்றார்கள்.

ஐயா அவர்கள் இந்த மண்ணிற்கு ஏன் 'பரத கண்டம்' எனப் பெயர் வந்ததென்பதற்கும், 'குமரிக் கண்ட'த்திற்கும் விளக்கம் தந்ததையும் எண்ணினால் இப்படி ஓர் அறிஞர் இவ்வளவு காலம் என்ன செய்தார் எங்கு இருந்தார், என்று எனக்குள்ளேயே வினா எழுப்பிக் கொண்டேன் அது மட்டுமன்று. அவர் தெளிவான விளக்கத்தோடு சொற்பொழிவு ஆற்றியதையும், பாவேந்தர் பாடலை இசைத்ததையும் எண்ணுவதுடன் ஒப்போலைக்காக நான் உங்களை நாடி வரப்போவதில்லை என்ற உறுதியான அறிவிப்புச் செய்ததையும் பார்த்தால் இவர் தான் நம் நாட்டையும், மொழியையும் ஆள்வதற்குத் தகுதி வாய்ந்த தமிழ்மறவன் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து' இன்று முதல் நான் இந்த இயக்கத்திலே என்னை இணைத்துக் கொண்டேன்" என்று தம் கருத்தை வீறுபொங்கத் தெளிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஈ.) பாண்டி வளவன் அறி. இ. க.மு. அவர்கள் கருத்து.

"நான் தென்மொழியையும் ஐயாவையும் நன்கு அறிந்தவன். ஆனால் அவர்கள் கொள்கையில் "இறைவன் இல்லை" என்று அறிவிக்காதவரை இந்த இயக்கம் வெற்றியடைய முடியாது. நான்கு இலக்கம் தமிழ மறவர்கள் தேவை நம் விடுதலை இயக்கம் வெற்றி பெற! ஆகையால் ஐயா அவர்கள் இறைச் சார்புக் கொள்கையில் தெளிவான அறிவிப்பை வெளியிட்டால் நான் என்னை இவ்வியக்கத்தில் இணைத்துக் கொள்கிறேன்" என்று மாறுபட்ட கருத்தை வெளிப்படுத்தினார்.

என் கருத்துரை ஆய்வு!

★ மேற்கண்ட அன்பர்களின் கருத்தில் என்னை மிகவும் கவர்ந்தது புலவர். திரு. கா. பழநியப்பன் அவர்கள் கருத்தும, திவான் சாய்பு என்னும் தேநீர் விற்பனையாளரின் கருத்துந்தாம்! அவர்கள்தாம் உண்மையான உ. த. மு, க. தொண்டர்களாகப் பணியாற்ற முடியும் என்பது என் தாழ்மையான கருத்து. ஆகவே என்னுடைய ஆய்வு பற்றித் தங்கள் மதிப்பீட்டினை நான் தங்கள் மேலான பணிகளுக்கிடையே தங்கள் தொண்டன் என்ற முறையில் அறிய விரும்புகிறேன்.

— அ. தமிழன்பன், கடையநல்லூர்.

"அண்ணா!"
"என்ன தம்பி?"
"வள்ளற் பெருமான் என்னும் இராமலிங்க அடிகளின் காலம் என்ன அண்ணா ?"
"1823 முதல் 1874 வரை "
"அவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வடலூரிலும் மேட்டுக்குப்பத்திலும் வாழ்ந்தவர் தாமே ?"
"ஆமாம்."
"பல ஆயிரக்கணக்கான பாடல்களைத் தமிழில் எளிமையாகவும் இனிமையாகவும் பாடியவர் தாமே அவர் ?
"ஆமாம் "
"அவருக்குப்பின் 1882இல் பிறந்து 1921 வரை வாழ்ந்த பாரதியார் தென்னார்க்காடு மாவட்டத்தை அடுத்த புதுவையில் இருந்தவர் தாமே ?"
"ஆமாம்."
"அவர் ஏன் அண்ணா வள்ளற் பெருமானைப் பற்றி ஒருவரியும் எழுதவில்லை?"
"நீயே சொல் தம்பி !"
"வள்ளற் பெருமான் நம்மவர்களைக் கொண்டே ஆண்டவருக்கு வழிபாடு செய்ய வேண்டும் என்று சொன்னவர்: வேத ஆகம இதிகாச புராணங்களில் இலட்சியம் வைக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியவர்; சாதி சமய ஆசாரங்களைக் கண்டித்தவர்; ஆரிய மொழியைவிடத் தென்மொழியே தலை சிறந்தது என்று கூறியவர் – என்பதால் தானே, அண்ணா, பாரதியார் அவரைப் பற்றி ஒரு வரியும் எழுதவில்லை?"
"எனக்குத் தெரியாது தம்பி !"

— தமிழவேள்.

தெரியுமா செய்தி......!

1. ஒட்டகத்தின் முதுகு வளைந்துள்ளது. ஆனால் முதுகெலும்பு நேராகத்தானுள்ளது.
2! நம் நில உலகில் 8,40,000 இற்கும் மேற்பட்ட விலங்கு வகைகள் வாழ்கின்றன,
3, உலகத்தின் மிகப் பெரிய நிலைத்திணை சிமிகயா. இதன் உயரம் 117 மாத்திரி.
4 திமிங்கிலத்தின் குட்டி பிறக்கும் போதே ஏறத்தாழ ஏழு மாத்திரி நீளமிருக்கும். வளர்ந்த திமிங்கிலம் 30 மாத்திரி நீளத்திற்கும் மேல் இருக்கும்.

—இளஞ்சேரல் முதுபாண்டியன்.

தமிழ்ப் பெயர் மாற்றமும் சிதைவும்!

— அறிவின் முதல்வன

தமிழ் கூறும் நல்லுலகில் மாற்றரசுகள் ஏற்பட்டன. மாற்றரசைச் சார்ந்த அரசுகள் இருந்தன.

தற்போது ஆளுகின்ற அரசும் தன்னை மாற்றரசு சார்ந்த அரசு அல்லது தன்னரசு என்று சொல்லிக் கொள்ள முடியாது அவல நிலையில் இருக்கிறது. இருப்பினும் தமிழ்நாட்டில் தமிழாட்சி நிலவ ஆர்வம் காட்டுவது வரவேற்கத் தக்கது.

வேதாரண்யம், 'திருமறைக் காடா'னது; கும்பகோணம், 'குடந்தை' ஆகியது; மாயூரம் 'மயிலாடு துறை'யானது சிறந்த மாற்றங்கள். தமிழ்நாட்டில் சிறந்த தூய தமிழ் வரலாற்றுப் பெயர்கள் மாற்றப் பட்டும் சிதைக்கப்பட்டும் வழங்குகின்றன.

இவற்றைக்களைந்து மாற்றியும், திருத்தியும் நேரிய நிலைக்குக்கொண்டு வருதல் மிகவும் தலையாய கடமையாகும்.

அந்தநல்லூர் என்னும் ஊர்ப் பெயர் அருந்தவ நல்லூரின் சிதைவு. திருப்பராய்த் துறை, திரு ஆலந்துறை, திருச்சேந்துறை என்பன காவிரிக் கரையில் அமைந்த ஊர்ப் பெயர்கள். திருஆலந்துறை மறைந்து போய் அந்த நல்லூராக வழங்குகிறது. திருச்சேந்துறை சிதைந்து திருச்செந்துறையாக வழங்குகிறது. நம் முன்னோர்கள் பெயர்களைக் கருத்தாழம் மிக்கனவாக அமைத்தார்கள். அவற்றை மாற்றும் போதும் சிதைக்கும் போதும் அவற்றின் பொருள்களும் கெடுகின்றன; இந்நிலை மக்களின் எண்ணுவதெல்லாம் உயர்வாக எண்ணுதல் என்ற மனப்பக்குவத்தை அழிக்கிறது. தன் பெயரிலும், தம் ஊரின் பெயரிலும் இருக்கும் சிறப்பை அறியாததால் தான் கீழ்த்தரமான, அருவருப்பான பெயர்களைச் சூட்டித் தாழ்ந்து கீழ்ப்பட்டு உழன்று அழிந்த நிலையில் இன்று வாழும் நிலை உள்ளது.

குளிர் தண்டலை குளித்தலையாகச் சிதைந்தது. குளித்தலையும் கூத்தாலையாகச் சிலர் வாயில் நறநறக்கிறது. கடம்பர் கோயில் முற்றிலா முலையம்மை இயற்கைப் பெயர். பாலகுஜாம்பாள் என்ற மாற்றத்தால் என்ன அழகை அல்லது எந்த மறைப்பைக் கண்டார்கள்? பேட்டைவாய்த்தலை Pettavathalai ஆக ஆங்கிலத்தில் எழுதப் பட்டுப் பெட்ட வாயத்தலையாக அருவருக்கும் தமிழில் திரும்ப மொழி பெயர்க்கப் பட்டு நகருந்து தலைப்புகளில் பொறிக்கப்பட்டு உலா வருகிறது. இப்படி ஆக்கிய அறிவாளர்களை என்னென்பது ?

ஊர்ப்பெயர்கள், கோயிலில் உள்ள திரு உருப் பெயர்கள், மாந்தர்களின் தனிப் பெயர்கள், பல துறைப் பெயர்கள் மாற்றப்பட்டும் சிதைக்கப் பட்டும் வழங்குவதைத் திருத்தியும் செப்பம் செய்தும் வழங்க, தமிழர்கள் முன்வரல் வேண்டும்.

ஏழை நாட்டில்...

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகண்ட லாய் கொண்ட சுடர் விளக்கு: அதில் எரிந்தது எரிவளி : அச்சுடர் ஒரு மணி நேரம் எரிய 3 இலக்கம் (300 ஆயிரம்) உருபா செலவானதாம்! விளையாட்டு நடந்த பதினறு நாட்களுக்கு, அதற்கு மட்டும் ஆன மொத்த எரி பொருள் செலவு 12 கோடி உருபா. இதன் வீண் விளக் கெண்ணைப் பெருமையை என்னென்று சொல்வது ? அந்தச் சுடர் எரிவதில் ஒரு மெய்ம்மம் (தத்துவம்) உள்ளதென்று முதலாளியக் கோமாளிக் கொடுங்கோலர்களும் அவர்களின் பிறங்கடைக் குஞ்சுகளும், இங்கும் குமுகாயக் கேட்டுக் குளுவான்களும் — வேண்டுமானல் — கூறலாம்! அதென்ன இழவு மெய்ம்மமோ, கொள்கையோ ? அது இந்த ஏழை நாட்டிற்குத் தேவைதானு என்பது தான் நமது கேள்வி !

கட்டுதற்கு நீர்ச்சீலையும், கன்னியழகை மறைப்பதற்கு தார்ச்சீலையும் இல்லாத கோடிக்கணக்கான மாந்தப் புழுக் கள் நெளிந்து கொண்டிருக்கும் இந்த நாட்டில்.—

குடிக்கக் கூழும், குண்டி மறைக்கக் கையகலத் துணியும் இல்லாமல், நாகரிக நகரங்களில் வளைந்து நெளிந்து தெரு வோரங்களில் அண்டி வாழும் ஆடு மாடுகளாக, முடங்கிப் படுத்திருக்கும் தெரு நாய்களாகப் பல கோடி ஏழைக் குடும் பங்கள் சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் இந்த நாட்டில்,

கூலிக்கும், ஓய்வுக்கும், வாழ்வுக்கும் போராடி, நாள் தோறும், உண்ணுநோன்பும், மறியலும், ஊர்வலமும் ஆகப் போராட்டங்கள் செய்தே, பட்டினயும், நோய் வாழ்வும் ஆக நலிந்த வாழ்வு நடத்திக்கொண்டிருக்கும் பலகோடி ஏழைத் தொழிலாளிகள் நிரம்பிய இந்த நாட்டில்,

இங்குள்ள மதங்களும், மூடநம்பிக்கைகளை வளர்க்கும் மடத் தலைவர்களும், கோயில் கோபுரங்களும், அங்குள்ள கற்சிலைகளும், ஏற்கனவே சுரண்டுவது போதாதென்று, கொடிய கல்நெஞ்சக் கயமை முதலாளிகளிடமும், ஆணவம் நிறைந்த அதிகாரிகளிடமும், ஈவு இரக்கமற்ற காவலர் களிடமும் கொத்தடிமைகளாக இங்குள்ள ஏழை மக்கள் சீரழிந்து கொண்டிருக்கும் இந்த நாட்டில்,

அறியாமைக்கும், மூடநம்பிக்கைக்கும்; ஏற்றத் தாழ்வு நெரிசல்களுக்கும், சாதி மதம் புரையோட்ட நோய்களுக்கும் ஆட்பட்டுக் கல்வியற்றுக் கதியற்று இருளில் வாழும் பூச்சி பொட்டுகளைப் போல் மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் மாந்த உயிர்ப் பிணங்கள் வாழும் இந்த நாட்டில்,

ஏழை மக்கள் படிக்கும் பல்லாயிரக்கணக்கான பள்ளிக் கூடங்களில் கூரை இல்லாமலும், பல கோடிக் கணக்கான குடிசைகளில் விளக்கு எரியாமலும் உள்ள ஏதுங் கெட்ட இந்த நாட்டில்,

போதிய தொழிலமைப்புகளும் தொழிற்கூடங்களும் சரியான திட்டஅமைப்புகளும் இல்லாமையால், பல இலக்கக் கணக்கான படித்த இளைஞர்கள் வேலையின்றிப் பெற்றோர் களுக்குச் சுமையாக ஊர்களிலும் வீதிகளிலும் உலாவந்து கொண்டிருக்கும் இந்த நாட்டில்,

போதிய உழவுக் கருவிகளும், வேளாண்மைக்குரிய மூலப் பொருள்களும். பாட்டாளிக்குரிய கூலியும் இன்றி, பல கோடிக் கணக்கான வரம்பு வெளிகள் கரம்புக் காடு களாகவும், பொட்டல் புதர்களாகவும் கிடக்கக் கூடிய இந்த நாட்டில்,

'தனியொருவனுக் குணவில்லையெனில் செகத்தினை அழித் திடுவோம்' என்று வீம்பாக வீரார்ப்புப் பாடல் பாடிய பாரதிக்கு நூற்றாண்டு விழா என வெற்று ஆரவாரப்படுத் தும் இந்த நாட்டில்,

—இதுபோலும் ஆடம்பர, ஆரவாரக் களியாட்டக் கூத்தாட்டக் கொண்டாட்டங்களும், விழா வேடிக்கைகளும் அகங்காரப் பொழுபோக்குகளும், செல்வக் கொழுப் புள்ளவர்களின், இருள் மனத்துத் தினவுகளைச் சொரிந்து விட்டு நிறைவுபடுத்தும் போக்கு தேவைதானு என்பதே நமது கேள்வி!

ஆரவார நிகழ்ச்சிகளிலும், வேடிக்கை விளையாட்டு விழாக்களிலும், அமெரிக்கா, உருசியா, பிரிட்டன் போன்ற பணக்கார நாடுகளோடு நாமும் போட்டி போட்டுக் கொண்டு இத்தகைய விழாக்களை நடத்த வேண்டுமா என்பதே நமது கேள்வி.

கேளுங்கள் விடை சொல்கிறோம்

(கேள்விகள் கேட்பவர் தம் முழு முகவரியும் தருதல் வேண்டும். ஒருவர் ஒரே சமயத்தில் ஒரு கேள்விக்கு மேல் கேட்க வேண்டாம். கேள்வி களுக்கு வரிசைப்படி விடை சொல்லப் பெறுவதால், அன்பர்கள் தங்கள் கேள்விக்கு விடையளிக்கப் பெறும் வரை பொறுத்திருக்கக் கேட்டுக் கொள் கிறோம்)

பாவலர் இடிமுரசு
சென்னை-14.

(?) தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக ம. கோ. இரா. (M G R) இருப் பதால் நாட்டுக்கு என்ன நன்மை?

(!) நாட்டிலுள்ள பெரும் பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப் பெறு பவர்கள் அரசமைக்கிறார் கள். நம்நாட்டுப் பெரும் பான்மை மக்கள் அரசி யல் அறிவு குறைந்தவர் கள்; கல்வியறிவற்றவர் கள்; சாதி, மத மூடநம் பிக்கைகளில் முழு நம் பிக்கை கொண்டவர்கள். அவர்களால் தேர்ந் தெடுக்கப் பெறும் ஆட்சி யாளர் எப்படிப்பட்ட வர்களாக இருக்க முடி யும்? அவர்களின் ஆதரவு பெற, அவர்களை என் றென்றும் தங்களுக்குச் சார்பானவர்களாகவே வைத்துக்கொள்ளும் பெரும முயற்சிதான் பெரும்பாலும் எந்த ஓர் ஆட்சிக் காலத்திலும நடைபெறு கிறது. ஆட்சிக்கு வருப வர்கள், அப்பெரும் பான்மை மக்களைக் கவரும் வகையிலேயே எந்தத் திட்டத்தையும் அறிவிக்கிறார்கள்; அறி விக்கப் பெற்று திட்டங் களில் சிலவற்றைச் செயல்படுத்துகிர்கள். அவை நாட்டு மக்கள் அனைவருக்கும் தேவை யான, நன்மையான திட் டங்கள் என்று சொல்லி விட முடியாது. ஆனல், ஒன்று மட்டும் உண்மை! தங்களைத் தேர்ந்தெடுத் தவர்களுக்கு அறிவூட் டும் படியான திட்டத் தை எவரும் செய்வ தில்லை. அவர்கள் அறிவு பெற்று விட்டால், தங் களை ஆதரிக்க மாட்டார் கள் என்னும் எண்ணம் அவர்களுக்கு இருக்கும் போல தெரிகிறது. எனவே, நாட்டுக்கு நன்மை என்பதை பொதுவில் எவையும் வது இயலாததாகவே இருக்கும். நம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்து வதையும், இங்குள்ள பொருளியல், குமுக வியல் வேறுபாடுகளை அறவே ஒழிக்கப்பாடுபடு வதையுமே நாட்டுக்கு நன்மை என்று கூற முடி யும் அவற்றை ம. கோ. இரா. இதுவரை செய்த தாகச் சொல்ல முடி யாது.

(?) கலைஞர். மு. கருணா நிதி அவர்களைப் பற்றித் தங்களின் கருத்தென்ன ?

(!) மிகுந்த உழைப்பாளர் உணர்வுடையவர்; சிறந்த நினைவாற்றல் உடைய வர் ; நல்ல பேச்சாளர். தம் கவனம் முழுவதை யும் அரசியல் பக்கமே செலுத்திக் கொண்டிருப் பதால் அவை வீணு கின்றன. அரசியல் வழி தமிழ் நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்துவிட முடியும் என்பதற்குரிய காலம் இன்னும் கனியவில்லை. எனவே, எஞ்சியுள்ள அவர் காலத்தை தமிழ் மொழி முன்னேற்றத்தி லும், தமிழின நலத் தொண்டிலும் செலுத்தி அவர் வாழ்வைப் பயனு டையதாகச் செய்ய வேண்டும் என்பதே நம் விருப்பம்.

ந. கிருட்டிணமூர்த்தி
(ஊர்ப் பெயர் இல்லை.)

(?) இந்து மதத்தை ஏற்க வில்லையென்றால், இறைவழிபாடு பற்றி உ. த. மு. க. வின் கொள்கை என்ன?

(!) உ. த. மு. க.வில் இறை உணர்வு பற்றி எந்தக் கருத்தும் கொள்கை யாக அறிவிக்கப்பட வில்லை. இறை நம்பிக் கையுள்ளவர்களும், நம் பிக்கையில்லாதவர்களும் இவ்வியக்கத்தில் இருக்க லாம்.

இத்தகைய வீண் செலவுகளை இந்த நாட்டில் பிறந்த குற்றத்திற்காக என்றென்றுமே ஏழை மக்களாகத் தான் இருக்கவேண்டும் என்று இறவாமல் உள்ளார்களே, அவர் களின் முன்னேற்றத்திற்காகச் செலவிடக்கூடாதா என்பதே நமது கேள்வி!

இதிலென்ன உலக ஒற்றுமை, இராசதந்திரம், வெளி நாட்டுறவு இருக்கிறது என்று நமக்குத்தெரியவில்லை! மற்ற முன்னேறிய நாடுகளைப்போல் நாங்களும் இருக்கிறோம் என் னும் வீண் பெருமையா? அல்லது இங்குள்ள ஏழ்மையை இத்தகைய விழாக்களை வீம்புக்காக நாமும் நடத்தாமற் போனல் அயல் நாடுகள் தெரிந்துகொள்ளுமே என்னும் கரவான அச்சமா? எதற்கு இவ்வளவு பெரிய சுமையை நாம் தலைக்கு மேல் எடுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும்? இதிலென்ன பெருமை நமக்கு?

இத்தகைய கேள்விகள் இப்பொழுதைக்கு, ஏளனத்துக் குரிய கேள்விகளாக, எதிர்ப்புக்குரிய கேள்விகளாக, இகழ்ச்சிக்குரிய கேள்விகளாக, ஏன் அறியாமை முத்திரை குத்தப்பட்டுப் பத்தாம்பசலிக் கொள்கையுடைய பழங்காலக் கேள்விகளாகக்கூட கருதப்படலாம்! ஆனல், எதிர்காலத்தில் இக்கேள்விகள்தாம் இவ்விந்திய நாட்டின் பொருளுடைய கேள்விகளாக, புரட்சிக் கேள்விகளாக மலரவிருக்கின்றன என்பதை, பொழுதுபோக்கு, ஆரவார, ஆணவக்கார அரசு விளங்கிக் கொள்ளட்டும்! பொதுமக்களும் இதைச் சிந்திக் கட்டும்!

அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர் களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும் பும் அன்பர்கள் கட்டா யம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறு கிறார்கள். — அமைச்சர்

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனர், அச்சிடுவோர் 'தென்மொழி' அச்சகம், 5, அருணசலத் தெரு, சென்னை-5.